



PRGI No. TNBIL/25/A1569

வைகறையில் **பேப்பர்பாய்**

www.paperboy.biz

VAIGARAIYIL PAPERBOY






சென்னை மலர்: 01 இதழ்: 181 12.02.2026 வியாழக்கிழமை

Chennai | Volume: 01 | Issue: 181 | Thursday | pages 8 | Rs.5/-

DISTRIBUTED ACROSS TAMILNADU AND PUDUCHERRY


# தமிழ்நாட்டிற்கு கூட்டணி ஆட்சி ஒத்துவராது

## முதல்வர் மு.க. ஸ்டாலின் பேச்சு

**சென்னை,பிப்.12:**

தமிழகத்துக்கு கூட்டணி ஆட்சி ஒத்துவராது என்று திமுக தலைவரும், தமிழக முதல்வருமான மு.க. ஸ்டாலின் நேற்று கூறினார்.

சென்னையில் இன்று நடைபெற்ற தனியார் நிகழ்ச்சி ஒன்றில் கலந்துகொண்ட தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலின் தமிழக அரசியல் குறித்தும் பேசினார்.

தமிழக அரசியல் குறித்துப் பேசிய முதல்வர், தமிழகத்துக்கு கூட்டணி ஆட்சி ஒத்துவராது, தமிழகத்தில், காங்கிரஸ் கட்சியுடனான கூட்டணி தொடரும் என்று தெரிவித்தார். இது, வரும் பேரவைத் தேர்தலில் வெற்றி பெற்று, கூட்டணி ஆட்சிக்கு வலியுறுத்துவோம் என்று காங்கிரஸ் கட்சித் தலைவர்கள் முன் வைத்து வரும் கோரிக்கைக்கு முற்றுப்புள்ளி வைக்கும் வகையில் அமைந்திருக்கிறது.

மேலும் நிகழ்ச்சியில் பேசிய மு.க. ஸ்டாலின், தமிழகத்தில் திமுக கூட்டணி மீண்டும் வெற்றி பெறும் என கருத்துக் கணிப்பு வெளியிடப்பட்டுள்ளது. இரண்டாவது இடத்தில் இருக்கக் கூடிய கட்சிக்கு இடையே வித்தியாசம் 12 சதவிகிதம் என்றும் கூறப்பட்டுள்ளது. இதில் மிக எளிய கணக்குதான், 3 சதவீத வித்தியாசம் இருந்தாலே அது க்ளீன் ஸ்வீப்தான். 12 சதவீதம் என்றால் அது தம்ப்பிங் விக்டரிதான் என்று கூறியுள்ளார்.

அதற்காக மெத்தனமாக இருந்துவிட மாட்டோம். இந்த கருத்துக் கணிப்பு எங்களுக்கான பூஸ்ட். திமுக கூட்டணி மக்களுக்காக இருக்கக் கூடிய இயக்கம். இன்னும் உற்சாகத்துடன் உழைத்து இந்தக் கணிப்பைஉண்மையாக்குவோம் என்றார்.

2021ஐ விட இந்த தேர்தல் மிகக் கடினமாக இருக்குமா? என்ற கேள்விக்கு, எதிரில் இருக்கும் கூட்டணிக் கட்சிகளின் குழப்பம்தான் இருக்குமே தவிர, எங்களது வெற்றி சிறப்பாகவே இருக்கும்.



மேலும் 2021ஐ விட இந்த தேர்தல் மிகக் கடினமாக இருக்குமா? என்ற கேள்விக்கு, எதிரில் இருக்கும் கூட்டணிக் கட்சிகளின் குழப்பம்தான் இருக்குமே தவிர, எங்களது வெற்றி சிறப்பாகவே இருக்கும். 2021ஆம் ஆண்டை விட தற்போது மிகஎளிதாகவே இருக்கும். ஏனென்றால், முன்பு செய்வோம் என்று சொல்லி வந்தோம். தற்போது ஏராளமான சாதனைகளை செய்திருக்கிறோம் என்றார்.

நீங்கள் கிரிக்கெட் விளையாடியிருக்கிறீர்களா என்று நிகழ்ச்சியில் கேட்கப்பட்டதற்கு, பள்ளியில், சாலைகளில் கிரிக்கெட் விளையாடியிருக்கிறேன். சேப்பாக்கத்தில் தமிழகத்துக்கு நிதி திரட்ட நடத்தப்பட்ட கிரிக்கெட் போட்டியிலும் பங்கேற்றுள்ளேன் என்றார் ஸ்டாலின்.

மேலும் தான் எப்போதுமே பௌலர்தான் என்றும் ஆஃப் ஸ்பின் பௌலர் என்றும் கூறியிருந்தார்.

முன்னதாக, காங்கிரஸ் கட்சியின் மாநிலத் தலைவர் செல்வப்பெருந்தகை, தமிழகத்தில் திமுக தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைய வேண்டும் என்று வலியுறுத்தி வருகிறார். தொடர்ந்து தமிழக காங்கிரஸ் கட்சி நிர்வாகிகளும் இதே கருத்தை வலியுறுத்தி பேசி வரும் நிலையில், அவர்களது பேச்சுக்கு பதிலளிக்கும் வகையில், திமுக தலைவரும் முதல்வருமான ஸ்டாலின் இன்று நிகழ்ச்சி ஒன்றில் பதிலளித்துள்ளார்.

## இன்றைய நாள்

வியாழக்கிழமை
(12–02–2026)
விசுவாவசு ஆண்டு, தை –29
பிறை: தேய்பிறை
திதி
தசமி நண்பகல் 1.20 வரை
பிறகு ஏகாதசி
நட்சத்திரம்:
கேட்டை பிற்பகல் 2.40 வரை
பிறகு மூலம்
யோகம்
சித்தயோகம்
ராகுகாலம்
நண்பகல் 1.30–3.00 மணி
எமகண்டம்
காலை 6.00 – 7.30 மணி.
சூலம் – தெற்கு.
நல்ல நேரம் :
காலை 9–10 மணி.
மாலை 4 –5 மணி

மேஷம் ................ தாமதம்
ரிஷபம் ................... களிப்பு
மிதுனம் ............ உழைப்பு
கடகம் ............... மகிழ்ச்சி
சிம்மம் ............... விவேகம்
கன்னி ................. நேர்மை
துலாம் .................. லாபம்
விருச்சிகம் ........ உற்சாகம்
தனுசு ................. நற்சொல்
மகரம் .................. நன்மை
கும்பம் ............... அமைதி
மீனம் .................... போட்டி

## சென்னையில் சீமான் திடீர் கைது



**சென்னை,பிப்.12:**

தமிழ்நாடு மாநில ஊரக வாழ்வாதார இயக்க அனைத்து பணியாளர்கள் நலச்சங்கம் சார்பில் சென்னை வள்ளுவர் கோட்டம் அருகே இன்று முற்றுகை போராட்டம் நடைபெற்றது.

10 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரியும் ஊரக மற்றும் நகர்ப்புற மகளிர் திட்ட பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு வழங்க வேண்டும், மகளிர் மேம்பாட்டு நிறுவனத்தில் மாவட்ட நிர்வாகத்தால் எழுத்துத்தேர்வு மற்றும் நேர்முகத்தேர்வு செய்யப்பட்ட பணியாளர்களை மகளிர் மேம்பாட்டு நிறுவன பணியாளர்களாக அங்கீகரித்து 10 ஆண்டுகளுக்கும் மேலாக பணிபுரியும் பணியாளர்களை காலமுறை ஊதியம் வழங்கி நிரந்தரப்படுத்த வேண்டும் என்பது உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி இந்த போராட்டம் நடந்தது.

இதில் மாநில ஊரக வாழ்வாதார இயக்க பணியாளர்கள் ஏராளமானோர் கலந்துகொண்டனர். போராட்டம் நடத்தியவர்களை நாம் தமிழர் கட்சி ஒருங்கிணைப்பாளர் சீமான் நேரில் சந்தித்து ஆதரவு தெரிவித்து பேசினார். அப்போது ஊரக உள்ளாட்சி பணியாளர்களை போலீசார் கைது செய்து வேனில் ஏற்றினர்.

அவர்களுடன் என்னையும் கைது செய்யுங்கள் என்றவாறு சீமானும் வேனில் ஏறினார். அவரையும் போலீசார் கைது செய்தனர். பின்னர் சீமான் விடுவிக்கப்பட்டார். சீமான் கைது செய்யப்பட்டால் அப்பகுதியில் சிறிது நேரம் பரபரப்பு நிலவியது.

## மீண்டும் அமெரிக்கா செல்லும் பாகிஸ்தான் பிரதமர்

**பாகிஸ்தான்,பிப்.12:**



காசா அமைதி வாரியத்தின் தொடக்க கூட்டத்தில் பங்கேற்க பாகிஸ்தான் பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் அடுத்த வாரம் அமெரிக்கா செல்ல உள்ளார்.

பாகிஸ்தானைத் தவிர, எகிப்து, ஜோர்டான், இந்தோனேசியா, கத்தார், சவுதி அரேபியா, துருக்கி மற்றும் ஐக்கிய அரபு அமீரகம் ஆகிய 8 முஸ்லிம் நாடுகள் வாஷிங்டனில் பிப்ரவரி 19 அன்று நடக்கும் இந்த கூட்டத்தில் பங்கேற்கின்றன.

பிரதமர் ஷெபாஸ் ஷெரீப் பிப்ரவரி 18 அன்று அமெரிக்கா செல்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

காசாவின் மறுசீரமைப்பு, போர்நிறுத்தத்தை அமல்படுத்துதல் மற்றும் காசாவின் எதிர்கால நிர்வாகக் கட்டமைப்பு குறித்து இதில் விவாதிக்கப்படும்.

கடந்த மாதம் டாவோஸில் நடைபெற்ற உலகப் பொருளாதார மாநாட்டின்போது, அமெரிக்க அதிபர் டொனால்ட் டிரம்ப் முன்னிலையில் பாகிஸ்தான் அதிகாரப்பூர்வமாக இந்த வாரியத்தில் இணைந்தது.

இதற்கிடையே காசாவை மேற்பார்வையிட டிரம்ப் தலைமையில் ஒரு வாரியம் அமைக்கப்படுவது, நவ காலனித்துவம் என மனித உரிமை அமைப்புகள் சாடி வருகின்றன.

முன்னதாக கடந்த ஆண்டு செப்டம்பர் மாதம் ஐநா பொதுச்சபை கூட்டத்தில் பங்கேற்க அமெரிக்கா சென்ற ஷெபாஸ் ஷெரீப் அதிபர் டிரம்ப் உடன் வெள்ளை மாளிகையில் வர்த்தகம் குறித்து பேச்சுவார்த்தை நடத்தியிருந்தது குறிப்பிடத் தக்கது.

## NDA கூட்டணியில் யார் பெரும்பான்மையாக இருக்கிறார்களோ அவர்களே முதலமைச்சர்

**நெல்லை,பிப்.12:**



நெல்லையில் பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் செய்தியாளர்களுக்கு பேட்டி அளித்தார். அப்போது அவர் கூறியதாவது:

*எங்கள் கூட்டணியில் பிரச்சனை என்கிறார்கள், ஆனால் தி.மு.க. கூட்டணியில் தான் பிரச்சனை உள்ளது.

*தி.மு.க. கூட்டணியில் காங்கிரஸ் நீடிக்குமா? அல்லது விஜய் கட்சிக்கு செல்லுமா? என்பதை பொறுத்திருந்து தான் பார்க்க வேண்டும்.

*உதயநிதி ஸ்டாலின் நாளைக்கு முதலமைச்சராக வேண்டும் என நினைத்து முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேசுகிறார்.

* எதையாவது சொல்ல வேண்டும் என நினைத்து தான் ஆட்சியில் பங்கு ஒத்துவராது என முதல்வர் கூறி உள்ளார்.

*தமிழ்நாட்டில் இதுவரை தி.மு.க. தொடர்ந்து ஆட்சிக்கு வந்தது கிடையாது.

*தேசிய ஜனநாயக கூட்டணியின் முதலமைச்சர் வேட்பாளர் எடப்பாடி பழனிசாமி தான்.

* தேசிய ஜனநாயக கூட்டணியில் யார் பெரும்பான்மையாக இருக்கிறார்களோ அவர்களே முதலமைச்சர்.

இவ்வாறு அவர் கூறினார்.

## த.வெ.க. கட்சி மாவட்டங்கள் அதிகரிப்பு- விஜய் அறிவிப்பு

**சென்னை,பிப்.12:**



தமிழ்நாடு சட்டசபை தேர்தல் தேதி அறிவிப்புக்கு இன்னும் சில நாட்களே உள்ள நிலையில், அரசியல் கட்சிகள் கட்சியை பலப்படுத்துவது, கூட்டணி பேச்சுவார்த்தை தொகுதி பங்கீடு உள்ளிட்ட பணிகள் தீவிரமாக வருகின்றன.

அந்த வகையில், தமிழக வெற்றிக்கழகத்தின் மாவட்டங்கள் அதிகரிக்கப்படுவதாக அக்கட்சி தலைவர் விஜய் அறிவித்துள்ளார். இதுதொடர்பாக அவர் எக்ஸ் தள பக்கத்தில் வெளியிட்டுள்ள பதிவில்,

தமிழக வெற்றிக் கழகத்தின் கழகப் பணிகளை மேற்கொள்ள, கழக அமைப்பானது சட்டமன்றத் தொகுதிகளை உள்ளடக்கி, 128 மாவட்டங்களாக ஏற்கெனவே பிரிக்கப்பட்டுள்ளன. இந்நிலையில் நிர்வாக வசதிகளுக்காகக் கழக மாவட்டங்களின் எண்ணிக்கை மேலும் கூடுதலாக்கப்பட்டுள்ளன. அதன்படி ஏற்கெனவே அறிவிக்கப்பட்ட மாவட்டங்களோடு, கூடுதலாக மாவட்டங்கள் பிரிக்கப்பட்டு, தற்போது 4 மாவட்டங்களுக்கு, கழக விதிகளின் படி மாவட்டக் கழக நிர்வாகிகள் நியமிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்ட நிர்வாகிகளின் விவரங்களை அறிய... Click Here https://dropbox.com/scl/fo/w3uvc48ljnlniyrqc5x0v/AO_PD9HpX94MhMeZjuNa7JM?rlkey=927a55eupvh0nocq4hi52dmvw&e=2&st=75kfq593&dl=0 புதியதாகப் பொறுப்பேற்கும் நிர்வாகிகளுக்கு எனது மனமார்ந்த வாழ்த்துகளையும், பாராட்டுகளையும் தெரிவித்துக்கொள்கிறேன். புதிய நிர்வாகிகளுக்குக் கழகத் தோழர்கள் அனைவரும் முழு ஒத்துழைப்பு நல்கிட வேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

## பிப்.28-ல் வானில் ஒரே நேரத்தில் 6 கோள்கள் அணிவகுக்கும் அரிய நிகழ்வு

**சென்னை,பிப்.12:**

சூரியக் குடும்பத்தில் உள்ள ஒவ்வொரு கோள்களும் சூரியனைச் சுற்றி வருகின்றன. இதில் பூமி ஒரு முறை சூரியனை சுற்றிவர 365 நாள்கள் ஆகின்றன. கோள்களின் சுற்று வட்டப் பாதையில் ஒன்றை ஒன்று சந்திக்கும் அபூர்வ நிகழ்வுகள் வானில் தென்படுவது வழக்கமானது. அதன்படி, கடந்த ஆண்டு ஜன. 22 ஆம் தேதி வானில் சூரியன் சுற்றுப் பாதையில் ஒரே நேரத்தில் 6 கோள்கள் தோன்றும் நிகழ்வுகளை காண முடிந்தது.

அதேபோன்று இந்த ஆண்டும் இரண்டு முறை ஒரே நேர்க்கோட்டில் 6 கோள்கள் அணிவகுத்து வரும் நிகழ்வுகள் நடைபெறவுள்ளன.

அதன்படி, செவ்வாய், வியாழன், யுரேனஸ், நெப்டியூன், வெள்ளி மற்றும் சனி ஆகிய 6 கோள்கள் ஒரே நேர்க்கோட்டில் சனிக்கிழமை (பிப்.28) அணிவகுத்து வரும் நிகழ்வு நடைபெற உள்ளது.

இந்த அரிய நிகழ்வில் வெள்ளி, செவ்வாய், வியாழன் மற்றும் சனி ஆகிய கோள்களை வெறும் கண்களால் மக்கள் காண முடியும். மிகத்துல்லியமாக, தொலை நோக்கி மூலம் காண முடியும். நெப்டியூன் மற்றும் யுரேனஸ் தொலைவில் உள்ளதால் நவீன தொலைநோக்கி மூலம் மட்டுமே காண முடியும்.

இவற்றைக் காண்பதற்காக அறிவியல் அமைப்புகள் சார்பில் நாடு முழுவதும் சிறப்பு ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

6 கோள்கள் அணிவகுத்து வரவிருப்பது குறித்து வானிலை ஆய்வாளர்கள் கூறியதாவது:

கோள்கள் ஒரே நேர்க்கோட்டில் வரவில்லை. பூமியில் இருந்து பார்க்கும் போது அவை ஒரே நேர்க்கோட்டில் இருப்பது போல ஒரு மாயத் தோற்றத்தை ஏற்படுத்துக்கின்றன. பல கோள்கள் வானத்தின் ஒரே பகுதியில் வரிசையாக நிற்பதால், இந்த நிகழ்வு பெரும்பாலும் கிரக அணிவகுப்பு என்று



அழைக்கப்படுகிறது. அந்த வகையில் ஆறு கோள்களும் வரிசையாக நிற்கின்றன. இந்த அரிய வகை சீரமைப்பு மாலை வானத்தை ஒளிரச் செய்யும், சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு மாலை வானத்தில் ஆறு கோள்கள் இணையும் சிறிது நேரத்திலேயே ஒரு அற்புதமான காட்சியை வழங்கும். சிறிது நேரம், வானம் தெளிவாக இருந்தால், ஒரே நேரத்தில் பல கிரகங்களைப் பார்க்கும் ஒரு மாயாஜால வாய்ப்பு மக்களுக்குக் கிடைக்கும். இப்போதிலிருந்து பிப்ரவரி இறுதி வரை, புதன், வெள்ளி, வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகியவை வானில் ஒரே பகுதியில் தெரியும்.

நாசாவின் கூற்றுப்படி, இந்த அரிய நிகழ்வை பிப்ரவரி 28 சனிக்கிழமை காணலாம். செவ்வாய், வியாழன், வெள்ளி, சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன் ஆகியவை தெரியும். வீனஸ் மிகவும் பிரகாசமாக இருக்கும். இதனை பார்ப்பதற்கு தெளிவான வானிலை மற்றும் தடையற்ற அடிவானம் அவசியம். இந்த அரிய வானிலை நிகழ்வு அனைவருக்கும் ஒரு அற்புதமான காட்சியை வழங்கும். இதில், புதனும் வெள்ளியும் சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகு அடிவானத்திற்கு சற்று உயரமாகத் தோன்றும், அதே நேரத்தில் சனி அடிவானத்திற்கு அருகில் தெரியும். இந்த நிகழ்வின் போது இரவு வானத்தில் கிட்டத்தட்ட முழு நிலவும் பிரகாசமாக தெரியும்.

### எந்தெந்த கிரகங்கள் தெரியும்

வானத்தில் மொத்தம் ஆறு கோள்களைக் காண முடியும்: புதன், வெள்ளி, வியாழன், சனி, யுரேனஸ் மற்றும் நெப்டியூன். வீனஸ் மிகவும் பிரகாசமாகவும் எளிதாகவும் காணப்படும். இது மேற்கு வானத்தில் தாழ்வாகவும், புதன் வீனஸுக்கு சற்று மேலே சிறிது நேரம் தெரியும். சனி தென்மேற்கில் சற்று உயரமாகவும், வியாழன் கிழக்கில் உயரமாக பிரகாசிக்கும், இரவு செல்லச் செல்ல தெளிவாகும். யுரேனஸ் வியாழனுக்கும் சனிக்கும் இடையில் மற்றும் ப்ளேயட்ஸ் விண்மீன் கூட்டத்திற்குக் கீழே காணப்படும், ஆனால் அதனை தொலைநோக்கியால் மட்டுமே பார்க்க முடியும். நெப்டியூன் சனிக்கு மிக அருகில் இருக்கும், அதனையும் தொலைநோக்கியால் மட்டுமே பார்க்க முடியும்.

### தெளிவான வானம் அவசியம்

வியாழன், வெள்ளி, சனி மற்றும் செவ்வாய் கிரகங்களை மைதானங்கள், கடற்கரையில் இருந்தோ அல்லது வீட்டின் மாடியில் இருந்தோ பார்க்க முடியும். செவ்வாய் இரவு 9 மணியளவில் உதயமாகும். கோள்களை தனித்தனியாகவும் பார்க்க முடியும். அதேநேரம், யுரேனஸ் மற்றும் நெப்டியூனை நவீன தொலைநோக்கியால் மட்டுமே பார்க்க முடியும். எனினும், அவற்றைக் கண்டறிவது சற்று கடினம். இந்த அரிய நிகழ்வை காண்பதற்கு தெளிவான வானம் அவசியம்.

இந்த அரிய மற்றும் அழகான நிகழ்வின் தனித்துவமான அம்சம் என்னவென்றால், கோள்கள் பொதுவாக வானத்தில் தோராயமாக ஒரே பாதையில் தோன்றும். இந்த அணிவகுப்பு அதன் நேரத்தின் காரணமாக தனித்துவமானது. இதுபோன்று 5 அல்லது 6 கோள்களின் அணிவகுப்பு மீண்டும் இந்த ஆண்டு ஆகஸ்ட் 29 ஆம் தேதி நடைபெறும் என கூறினர்.

## தண்டலை நடுநிலைப் பள்ளியில் வானவில் மன்றம் அறிவியல் செயல்பாடுகள்





**புதுக்கோட்டை, பிப்.12:**
புதுக்கோட்டை மாவட்டம் மணமேல்குடி ஒன்றியம் தண்டலை ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் வானவில் மன்ற அறிவியல் மற்றும் கணித செயல்பாடுகள் பள்ளியின் பொறுப்பு தலைமை ஆசிரியர் சீனிவாசன் தலைமையில் நடைபெற்றது வானவில் மன்ற ஒன்றிய ஒருங்கிணைப்பாளர் திருமதி ஜெனிட்டா மாணவர்களுக்கு அறிவியல் மற்றும் கணித செயல்பாடுகளை நேரடியாக செய்து காட்டினார்.

தொடர் இணைப்பு மற்றும் பக்க இணைப்பு, காய்கறி மற்றும் பழங்கள் மூலம் மின் இணைப்பு உள்ளிட்ட சோதனைகள் செய்து காட்டப்பட்டது.

6,7 மற்றும் எட்டாம் வகுப்பு மாணவர்கள் சுமார் 30 பேர் இந்நிகழ்வில் பங்கேற்றனர் ஆசிரியர்கள் தேன்மொழி,மாலதி சரண்ராஜ் மற்றும் பிரதீபா ஆகியோர் கலந்து கொண்டனர்.

## புதிய பகுதி நேர நியாய விலை கடை திறப்பு விழா



**திருவண்ணாமலை , பிப்.12:**
திருவண்ணாமலை சட்டமன்றத் தொகுதி வேடியப்பனூர் அடி அண்ணாமலை பகுதியில் புதிய பகுதி நேர நியாய விலை கடையை டாக்டர் எ.வ. வே கம்பன் அவர்கள், உயர்திரு மாவட்ட ஆட்சித் தலைவர் க. தர்ப்பகராஜ் இ.ஆ. ப. அவர்கள் பகுதி நேர நியாய விலை கடையை திறந்து வைத்தார்கள்.

கழகத் தோழர்கள், பொதுமக்கள் அனைவரும் திறப்பு விழாவில் கலந்து கொண்டார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தமிழக அரசை கண்டித்து வீடுகளில் கருப்புக்கொடி கட்டி மக்கள் போராட்டம்





**நெல்லை, பிப்.12:**
நெல்லை மாவட்டம் கூடங்குளம் கிராமத்தில் நீண்ட நாட்களாக குடிநீர் பற்றாக்குறை பெரிய பிரச்சனையாக இருந்து வருகிறது.

இதற்கு நிரந்தர தீர்வு காண வள்ளியூர் வட்டார பகுதியில் செயல்படுத்தப்படும் ரூ.605 கோடி மதிப்பிலான குடிநீர் திட்டத்தில் கூடங்குளம் கிராமத்தை இணைத்திட முதலில் உத்தரவிடப்பட்ட நிலையில் திடீரென கூடங்குளம் ஊராட்சியை இணைப்பில் இருந்து நீக்கிவிட்டனர்.

தமிழக அரசின் இந்த நடவடிக்கைக்கு கூடங்குளம் பஞ்சாயத்து மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனை மாற்றி, புதிய குடிநீர் திட்டத்தில் கூடங்குளம் கிராமத்தையும் இணைக்க வேண்டும் எனக்கோரி கிராம மக்கள் கூட்டம் போட்டு ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றினர்.தொடர்ந்து தங்களது எதிர்ப்பை தெரிவிக்கும் விதமாக தமிழக அரசை கண்டித்து கூடங்குளம் கிராமத்தில் உள்ள வீடுகளில் மக்கள் இன்று கருப்பு கொடி கட்டினர். கூடங்குளம் பஜார் பகுதியில் உள்ள கடைகள், வணிக நிறுவனங்கள், வீடுகளில் கருப்பு கொடி கட்டப்பட்டது.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறுகையில், கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக கூடங்குளம் ஊராட்சிக்கு சுனாமி மற்றும் கே.கே.என்.பி.பி. குடிநீர் திட்டங்களின் மூலம் வழங்கப்பட வேண்டிய 8 லட்சம் லிட்டர் குடிநீர் முழுமையாக வழங்கப்படவில்லை.தற்போது புதிய குடிநீர் திட்டத்திலும் எங்களை சேர்க்கவில்லை.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தையும்,சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளையும் கண்டிக்கிறோம் என தெரிவித்தனர்.

### 2026 சட்டமன்ற தேர்தல்

# இந்திய துணை தேர்தல் ஆணைய குழு சென்னை வருகை




**சென்னை, பிப்.12:**
தமிழ்நாட்டில் விரைவில் சட்டமன்ற தேர்தல் நடைபெற இருக்கிறது. தேர்தலை எதிர்கொள்ள அரசியல் கட்சிகள் தீவிரம் காட்டி வருகின்றன. இந்த நிலையில், தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி சட்டமன்றத் தேர்தல்களுக்கான ஏற்பாடுகளை ஆய்வு செய்வதற்காக இந்திய துணைத் தேர்தல் ஆணையர்கள் பன்வர் பிரகாஷ், மணீஷ் கார்க், பவன் குமார் சர்மா, சஞ்சய் குமார், ஆஷிஷ் கோயல் மற்றும் பலர் அடங்கிய 7 பேர் கொண்ட குழு சென்னை வந்தடைந்தனர்.

இந்திய தேர்தல் ஆணையத்தின் மூத்த துணைத் தேர்தல் ஆணையர் மணீஷ் கார்க் கூறுகையில், "தேர்தல் ஆயத்த பணிகளை ஆய்வு செய்வதற்காக தேர்தல் ஆணையத்தின் அதிகாரிகள் குழு சென்னை மற்றும் புதுச்சேரியை அடைந்துள்ளது," என்றார்.

தேர்தல் ஆணைய குழுவினர் இன்று நாளை (பிப். 12 மற்றும் 13) சென்னையில் முகாமிட்டு, தமிழக தலைமை தேர்தல் அதிகாரி அர்ச்சனா பட்நாயக் மற்றும் அதிகாரிகளுடன் ஆலோசனை மேற்கொள்கிறார்.

12ஆம் தேதி தலைமை தேர்தல் அதிகாரியுடன் ஆலோசனை மேற்கொண்ட பிறகு, வருமான வரித்துறை, சுங்கத்துறை, காவல்துறை, ரெயில்வே, துணை ராணுவம், தபால்துறை, சிவில் விமான போக்குவரத்துறை உள்ளிட்ட 20-க்கும் மேற்பட்ட துறைகளின் ஒருங்கிணைப்பு அலுவலர்களுடன் ஆலோசனை மேற்கொள்ளப்பட இருக்கிறது.

இதைத் தொடர்ந்து 13ஆம் தேதி அனைத்து மாவட்ட தேர்தல் அதிகாரிகளுடன் (கலெக்டர்கள்) துணை கமிஷனர் ஆலோசனை மேற்கொள்கிறார். அதன் பின்னர் மாவட்ட போலீஸ் சூப்பிரண்டுகளுடன் ஆலோசனை மேற்கொள்ளப்படுகிறது.

இந்த ஆலோசனைக் கூட்டத்தின்போது, சட்டம் ஒழுங்கு பிரச்சனை வரக்கூடிய தொகுதிகள், வாக்குச்சாவடிகள் ஆகியவை பற்றி ஆய்வு மேற்கொள்ளப்படும். தேவையான முன்னேற்பாடு பணிகள் நிறைவுபெற்ற பிறகு தேர்தல் தேதி குறித்த அறிவிப்பு வெளியாகும் என தெரிகிறது.

# காங்கிரசாரிடம் எந்த கலக்கமும் இல்லை விரைவில் முதல்வரை சந்திப்போம்..!

### செல்வப்பெருந்தகை




**சென்னை, பிப்.12:**
ஆட்சியில் பங்கு என்பது தமிழ்நாட்டில் ஒத்துவராது என முதலமைச்சர் அளித்த பேட்டி தொடர்பான கேள்விக்கு தமிழ்நாடு மாநில காங்கிரஸ் தலைவர் செல்வப்பெருந்தகை பதில் அளித்துள்ளார்.

முதல்வரின் கருத்தால் திமுக கூட்டணி, தொகுதி பங்கீடு பேச்சுவார்த்தையில் பிரச்சனை ஏற்படாது என அவர் தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் மேலும் கூறியதாவது:-

ஒவ்வொரு கட்சிக்கும் ஒவ்வொரு பார்வை உள்ளது, கட்சியின் தலைவர் என்ற முறையில் கருத்து கூறியுள்ளார் முதல்வர்.

திமுக- காங்கிரஸ் கூட்டணி வலுவாகவே இருக்கிறது. தமிழ்நாட்டில் என்ன நிலை என்பதை முதலமைச்சர் கூறியுள்ளார், இதனால், கூட்டணிக்குள் பிரச்சனை இருக்காது.

அகில இந்திய காங்கிரஸ் தலைமை கலந்து ஆலோசித்து முடிவெடுப்பார்கள். பிளவுபடுத்தியே பழக்கப்பட்ட பாஜகவினர் பிளவு என்று தான் பேசுவார்கள். ஒரிசா, பீகார், மலேசியா என்று ஊருக்கு ஏற்ப பாஜகவினர் பேசுவார்கள்.

காங்கிரசாரிடம் எந்த கலக்கமும் இல்லை, நாங்கள் இந்த மண்ணை நேசிப்பவர்கள், விரைவில் முதல்வரை சந்திப்போம்.

தொகுதி பங்கீடு தொடர்பாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலினை வெகு விரைவில் சந்திப்போம்.

இவ்வாறு அவர் கூறினார்.

மாணிக்கம் தாகூர் தொடர்பான கேள்விக்கு எங்களுக்குள் உள்ள பிரச்சனையை நாங்கள் பேசி தீர்வு காண்போம் என பதில் அளித்தார்.

# ஜனநாயகன் வரும் போது உங்கள் நாற்காலியில் இருந்து நீங்கள் நகர வேண்டியது வரும்

### – நாஞ்சில் சம்பத்




**தூத்துக்குடி, பிப்.12:**
தமிழக வெற்றிக் கழகம் கட்சியின் கொள்கை விளக்க பொதுக்கூட்டம் திருச்செந்தூரில் நடந்தது.

தூத்துக்குடி தெற்கு மாவட்ட இளைஞரணி செயலாளர் பிரேம் பாண்டியன் தலைமை தாங்கினார். தெற்கு மாவட்ட செயலாளர் பிரைட்டர் முன்னிலை வகித்தார். கூட்டத்தில் பரப்புரை செயலாளர் நாஞ்சில் சம்பத் கலந்து கொண்டு பேசினார்.

அவர் பேசியதாவது:-

ஆட்டம் போட்ட சூரனை முருகன் எப்படி சம்ஹாரம் செய்தாரோ? அதேபோல் ஆட்டம் போட்டவர்களை தலைவர் விஜயின் தம்பிகள் சம்ஹாரம் செய்யப் போகிறார்கள். இனி வரும் காலம் நம் காலம். அடுத்த முதலமைச்சர் விஜய் தான். அந்த வார்த்தைக்கு வடிவம் தாருங்கள். 2 பெரிய பகையை எதிர்த்து எங்கள் தலைவர் களத்தில் நிற்கிறார்.

கடந்த காலங்களில் தே.மு.தி.க. கட்சியை விஜயகாந்த் உருவாக்கினார். ஆனால் இன்றைய தினம் விருப்பமனு வாங்குவதற்கு கூட கட்சியில் ஆள் இல்லை என தகவல்கள் வெளியாகி உள்ளது. மக்களுக்காக தொடங்கப்பட்ட கட்சி தே.மு.தி.க. அந்த கட்சி தற்போது கரைந்து கொண்டிருக்கிறது.

அதற்கு ஒரு மாற்றாகத்தான் அரசியல் மாற்றத்தையும், ஆட்சி மாற்றத்தையும் உலகநாயகன் கமலஹாசன் வந்தார். தி.மு.க. மீது கூர்மையை தீட்டினார். ஆனால் தற்போது அறிவாலயத்தின் தாழ்வாரத்தில் படுத்துக்கிடக்கிறார் உலக நாயகன். இந்த தேர்தல் முடிவதற்குள் சீமான் கட்சியை கல்லறைக்கு அனுப்ப வேண்டும்.

இந்திய துணைக் கண்டத்தில் 1 கோடி இளைஞர்களை வைத்திருக்கிற தலைவனை இன்று தான் அரசியல் பார்க்கிறது.

தி.மு.க.விற்கு உழைத்தது உனது மகனா?, தி.மு.க.விற்கு வேர்வை பாய்ச்சியது உனது குடும்பம் மட்டும் தானா? தி.மு.க.விற்காக கண்ணீரும் செந்நீரும் சிந்தியது உங்கள் குடும்பம் மட்டும் தானா? உதயநிதிக்கு ஒரு திருக்குறளை ஒழுங்கா சொல்ல தெரியுமா? மாநில சுய ஆட்சி பற்றி அவர் ஒரு மணி நேரம் பேசினால் நான் நிறுத்திவிடுகிறேன்.

ஜனநாயகன் வராது என்று கருதினீர்களா? நதி நடக்க மறுத்தாலும் வெள்ளம் நிற்காது. ஜனநாயகன் வரும் போது உங்கள் நாற்காலியில் இருந்து நீங்கள் நகர வேண்டியது வரும்.

நீங்கள் எப்போது வெள்ளி நாற்காலியில் அமர்ந்தீர்களோ, அப்போதே உங்களது முதலமைச்சர் நாற்காலி நகரத் தொடங்கி விட்டது. ரேம்வாக்கிற்கு எங்கள் தளபதி போடும் பேண்ட் கலரில் முதலமைச்சர் பேண்ட் போடுகிறார். வேறு கலர் கிடைக்கவில்லையா. கலரும் களவு தானா? எங்கள் தளபதி போல் அவரும் ரேம்வாக் போகிறார். இந்த ரேம்வாக்கை தமிழகத்திற்கு கொண்டு வந்ததே எங்கள் தளபதி விக்கிரவாண்டியில். எங்கள் தளபதி ராம் வாக் செல்ல அவருக்கு தகுதி இருக்கிறது. உனக்கு அப்படி என்ன தகுதி இருக்கிறது?.

சேப்பாக்கம் மைதானத்தில் விசில் ஊத கூடாது என்று தடை விதித்துள்ளார்கள். யாராவது தி.மு.க.வினரை பார்த்தால் விசில் எடுத்து ஊதுங்கள். விசில் ஊதும் போது அவரது செவில் கிழியும் அளவிற்கு ஊத வேண்டும். யானை பிளிரும் ஓசையை விட விசிலின் ஓசை அதிகமானது

இவ்வாறு அவர் பேசினார்.

கூட்டத்தில் மாநிலத் துணைச் செயலாளர் சுபத்ரா முருகன், திருச்செந்தூர் ஒன்றிய செயலாளர் ராஜ்குமார், உடன்குடி ஒன்றிய செயலாளர் விஜய ராஜ், பத்ரி பிரசாத், நகர செயலாளர் முருகானந்தம், இளைஞர் அணி ஒன்றிய பொருளாளர் மதன், யாசர் அரபு, மாவட்ட செயற்குழு உறுப்பினர் ஜோதி குமரன் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

## கலாநிதி வீராசாமி சால்வை



**திருவண்ணாமலை,பிப்.12:**
திருவண்ணாமலை மாவட்டத்திற்கு வருகை புரிந்த வட சென்னை நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி அவர்களை கலசபாக்கம் சட்டமன்ற உறுப்பினர் பெ.சு. தி. சரவணன் அவர்கள், டாக்டர் எ.வ.வே கம்பன் அவர்கள், கார்த்திவேல்மாறன் அவர்கள் சால்வை அணிவித்து வரவேற்றார்கள்.

**தமிழ்நாடு இ பேப்பர் செய்தியாளர் நிர்மலா ஸ்ரீதர் திருவண்ணாமலை**

## தே.ஜ.கூட்டணியில் இணையும் தேமுதிக? உறுதிப்படுத்திய நயினார் நாகேந்திரன்



**நெல்லை, பிப்.12:**
நெல்லை மாவட்டம் கூடங்குளம் கிராமத்தில் நீண்ட நாட்களாக குடிநீர் பற்றாக்குறை பெரிய பிரச்சனையாக இருந்து வருகிறது.

இதற்கு நிரந்தர தீர்வு காண வள்ளியூர் வட்டார பகுதியில் செயல்படுத்தப்படும் ரூ.605 கோடி மதிப்பிலான குடிநீர் திட்டத்தில் கூடங்குளம் கிராமத்தை இணைத்திட முதலில் உத்தரவிடப்பட்ட நிலையில் திடீரென கூடங்குளம் ஊராட்சியை இணைப்பில் இருந்து நீக்கிவிட்டனர்.

தமிழக அரசின் இந்த நடவடிக்கைக்கு கூடங்குளம் பஞ்சாயத்து மக்கள் எதிர்ப்பு தெரிவித்தனர்.

இதனை மாற்றி, புதிய குடிநீர் திட்டத்தில் கூடங்குளம் கிராமத்தையும் இணைக்க வேண்டும் எனக்கோரி கிராம மக்கள் கூட்டம் போட்டு ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றினர்.தொடர்ந்து தங்களது எதிர்ப்பை தெரிவிக்கும் விதமாக தமிழக அரசை கண்டித்து கூடங்குளம் கிராமத்தில் உள்ள வீடுகளில் மக்கள் இன்று கருப்பு கொடி கட்டினர். கூடங்குளம் பஜார் பகுதியில் உள்ள கடைகள், வணிக நிறுவனங்கள், வீடுகளில் கருப்பு கொடி கட்டப்பட்டது.

இதுகுறித்து அப்பகுதி மக்கள் கூறுகையில், கடந்த 5 ஆண்டுகளுக்கும் மேலாக கூடங்குளம் ஊராட்சிக்கு சுனாமி மற்றும் கே.கே.என்.பி.பி. குடிநீர் திட்டங்களின் மூலம் வழங்கப்பட வேண்டிய 8 லட்சம் லிட்டர் குடிநீர் முழுமையாக வழங்கப்படவில்லை.தற்போது புதிய குடிநீர் திட்டத்திலும் எங்களை சேர்க்கவில்லை.

தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தையும்,சம்பந்தப்பட்ட அரசு அதிகாரிகளையும் கண்டிக்கிறோம் என தெரிவித்தனர்.

## 9 பேர் கொண்ட தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழுவை அமைத்தது இந்திய கம்யூனிஸ்ட்!




**சென்னை, பிப்.12:**
தமிழ்நாட்டில் 2026 சட்டமன்ற தேர்தல் நெருங்கிவரும் நிலையில், இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி சார்பில் தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது. தேசிய செயற்குழு உறுப்பினர் மூர்த்தி தலைமையில் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக அக்கட்சியின் மாநிலச் செயலாளர் மு.வீரபாண்டியன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

தோழர்கள் டி.எம். மூர்த்தி- ஒருங்கிணைப்பாளர், க.சந்தானம், வஹிதா நிஜாம், மருத்துவர் ஜி.ஆர்.ரவீந்திர நாத், எம்.செல்வராஜ், த.லெனின், சு.மோகன் குமார், பி.எஸ். மாசிலாமணி, அ.பாஸ்கர் ஆகியோர் கொண்ட தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி, தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கு ஏதுவாக அனைத்து துறை அமைப்புகளும், சமூக ஆர்வலர்கள், அறிவு ஜீவிகள் உள்ளிட்ட பொது மக்களும் தங்களது கருத்துக்களையும், ஆலோசனைகளையும் கீழ் கண்ட முகவரிக்கு அனுப்பி வைக்க வேண்டும் எனக் கேட்டுக் கொள்கிறோம்.

மேலும் விவரங்களுக்கு: இந்தியக் கம்யூனிஸ்ட் கட்சி தமிழ்நாடு மாநிலக்குழு "பாலன் இல்லம்" எண் 43/19, செவாலியர் சிவாஜி கணேசன் சாலை, தியாகராயா நகர், சென்னை - 600 017, அலைபேசி எண்: 98408 54707, மின்னஞ்சல்: cpi.tamilnadu@gmail..com. " எனக் குறிப்பிட்டுள்ளார்.

## நயினார் நாகேந்திரன் தலைமையில் பா.ஜ.க. தேர்தல் மேலாண்மை குழு அமைப்பு

**சென்னை, பிப்.12:**
தமிழக பா.ஜ.க. தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் களப்பணியில் முழுமூச்சாக ஈடுபட்டு வருகிறார்கள்.

எனது தலைமையில் சட்டமன்ற தேர்தல் மேலாண்மைக் குழுவானது அமைக்கப்படுகிறது.சட்டசபை தேர்தலை யொட்டி பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் தலைமையில் தேர்தல் மேலாண்மைக் குழு அமைக்கப்பட்டுள்ளது.

இதுதொடர்பாக பா.ஜ.க. மாநில தலைவர் நயினார் நாகேந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில்,

வருகின்ற சட்டசபை தேர்தல் 2026 சிறப்பாக எதிர்கொண்டு, தேசிய ஜனநாயகக் கூட்டணியானது பெருவாரியாக வெற்றி பெற்று, தமிழகத்தில் ஆட்சி அமைத்திடும் வகையில், தமிழக பா.ஜ.க. தலைவர்கள் மற்றும் தொண்டர்கள் களப்பணியில் முழுமூச்சாக ஈடுபட்டு வருகிறார்கள். முக்கியத்துவம் வாய்ந்த இந்த சட்டமன்ற தேர்தலில், நமது கட்சியின் தேர்தல் பணிகளை கடந்த காலங்களைப் போல சிறப்பாக வழிநடத்திட, எனது தலைமையில் சட்டமன்ற தேர்தல் மேலாண்மைக் குழுவானது அமைக்கப்படுகிறது.

மேலாண்மைக் குழு அமைப்பாளர் - பொன். இராதாகிருஷ்ணன் (தேசிய செயற்குழு உறுப்பினர்)

இணை அமைப்பாளர் - எஸ்.ஆர்.சேகர் (மாநில பொருளாளர்)

இணை அமைப்பாளர் - ஆர்.என். ஜெயப்பிரகாஷ் (மாநில துணைத் தலைவர்)

இணை அமைப்பாளர் - மா. வெங்கடேசன் (மாநில துணைத் தலைவர்)

இணை அமைப்பாளர் - மாலா செல்வகுமார் (மாநில பொதுச் செயலாளர், ஓபிசி அணி)

இணை அமைப்பாளர் - எஸ்.ஆர். ராமப்பிரியன் (கட்சி உறுப்பினர்) என்று குறிப்பிடப்பட்டுள்ளது.


just499®
MLM SOFTWARE
All Types of MLM Software Solutions Available
Binary
Unilevel
Matrix
Board
Generation
ROI / Investment
ONLY Rs. 499
Website: just499.com
Phone/WhatsApp: 7789951009
Email: orderjust499@gmail.com


Sri Manjal Mart
20% OFF
தரமான ஆன்மீக பூஜை பொருள்களை குறைந்த விலையில் நிறைவாக வாங்க
www.manjalmart.com
7789951009
order@manjalmart.com


CAR WASH
SADHANA DEVI.K
SUPREME
Car Wash & Detailing
Car Foam Pressure Wash
Teflon Coating
Ceramic Wax Treatment
Under Chassis Painting
Interior Foam Wash / Stain Remover
Paint Correction / Protection
We Done Here
9840882711
7200043675
Supremecarwashchennai@gmail.com
No.17/4, Senniamman Koil Street, Tondiarpet, Chennai – 600 081.


Telecaller Job
Apply Today
Mobile Calling !!!!
Rs 250–Rs500 per day
Work From Home Jobs
Ananda Bhaskar
Rs 8000 – Rs 15000 per month
9337501889
7789941009


அருள்தரும்
தெய்வம்
என்றும் நம் இல்லங்களில்
www.arultharumdeivam.com
அற்புதமான ஆன்மீக செய்திகள், பரிகாரங்கள், ஸ்தல வரலாறு மற்றும் சுவாரஸ்யமான தகவல்கள் மாதம் இருமுறை படித்து ஆன்மீகத்தை அறியுங்கள்..


S.R
Call Drivers Travels
24 Hours
Man Power & All Vehicle Available
Prop. S.SRIRAM
Contact: 95513 81576 / 86086 22056
True Work is Our Capital
No.89/49, E.H.Road, Cornation Nagar, K.Pet, Ch-21.


Breaking News Card.com
www.breakingnewscard.com
BREAKING NEWS
We Create Professional
Breaking News Cards
Daily 4 Cards Plus
get News Portal FREE
Call: 7789951009
₹999 ONLY


ADVERTISE WITH US
CONTACT US
9438610756


Low Cost Matrimony Website
999 SITE
MATRIMONY
WEBSITE
RS.999/-
Call/Whatsapp - +91 7789951009


FREE MARRIAGE INFORMATION CENTER :
இலவச திருமண தகவல் மையம்
இலவச திருமண தகவல் மையம்
யாருக்கும் பணம் தர தேவை இல்லை
பணம் வங்கும் புரோக்கர்கள் தவிர்க்கவும்
www.enthuani.com
Call: 9337501889


FINDING THE PERFECT HOUSE YOU CAN CALL HOME
PREMA ENTERPRISES
DO YOU WANT TO
BUY
OR
SELL
PROPERTY OR LAND?
+91 9884417843


Vilambaram
We provide Targeted Leads to grow your buisness
Boost your business
Call:: 91 7789941009, 9337501889
www.vilambaram.com


THINKING to BUY / SELL / RENT
a PROPERTY
New / Resale ..
Residential / Commercial ..
Plots
Flats
House
Villa
Bungalows
Farm Land
Ware Houses
Factory Sites
Sheds
JOINT VENTURES INVITED
MK REAL ESTATE
Tell me your Budget We Show Your Home
Call :7871617005


CUSTOMIZED
MLM SOFTWARE
STARTS WITH
Rs.9999*
ONLY
BINARY PLAN
GENERATION PLAN
SINGLE LEG PLAN
MATRIX PLAN
CRYPTOCURRENCY
CONTACT
9445242169


Vilambaram
www.vilambaram.com
WE ARE Digital Marketing Agency
We are the
LEADS GENERATION
FACTORY
For Your
REAL ESTATE
BUSINESS
* Business Lead
* 100% Verified Lead
* Targeted Lead
GROW YOUR BUSINESS WITH US
for more details
+91 7789941009
+91 9337501889
vilambarampage@gmail.com
80 %OFF SPECIAL OFFER
DISCOUNT
90 DAYS
MONEY BACK GUARANTEE



Vilambaram
WE HELP YOU TO BOOST YOUR BUSINESS
VISIT:VILAMBARAM.COM
CONTACT: 8122798599


Get Free Jobs Alert on Your
WhatsApp
Register Yourself on our
8122664699
WhatsApp Your Name, Age & Address on Above Number
Josh Jobs Team Give u Daily Update of Govt. as Well as Private Jobs


ST COURIER
The People's Choice
ISO 9001:2008 Certifed
DOMESTIC - INTERNATIONAL
Old No. 1/2, New No.3, Kesavan St., Tondiarpet, Chennai-600081.
Cell: 9176130601

# கவிதை அரங்கம்!






இன்று கடினமாக
இருக்கலாம்
நாளை இன்னும் மோசமாக
இருக்கலாம் ஆனால்
நாளை
மறுநாள் பிரகாசமான
நாளாக இருக்கும்

மனநிலை சமநிலையில்
இருப்பவர்களால் மட்டுமே
என்றும் உயர்நிலையை
அடைய இயலும்

உண்மையான மகிழ்ச்சி
என்பது ஒருவரின் ஆற்றல்
மற்றும் திறமைகளை
முழுமையாகப்
பயன்படுத்தும் வாய்ப்பே

எவன் ஒருவன்
தனக்குத்தானே
மனக் கட்டுப்பாடுகளை
ஏற்படுத்தி கொள்கிறானோ
அவனே சுதந்திர
மனிதனாவான்

## வாழ்க்கை தத்துவம்...



சிரிப்பால் தொடங்கும் நாள்
மனதை வெல்லும்
வாழ்க்கையாக மாறும்

எளிமை தான் வாழ்வின்
மிகப் பெரிய செல்வம்

காலத்தை வீணாக்கும்
ஒவ்வொரு நொடியும்
வாழ்வின் சுவையை குறைக்கிறது

சிறிய தருணங்களை
மதிக்க கற்றுக்கொண்டால் தான்
பெரிய நினைவுகள் உருவாகும்

வாழ்வின் சிரிப்பை
வாங்க பணம் போதாது
ஆனால் மனம் போதும்

வாழ்க்கை ஓர் ஓவியம்
வண்ணம் தருவது நம் செயல்கள்

# செயல்கள் தான் பதில்



அவன் அந்த இரவிலும் தூங்கவில்லை. ஜன்னலோர நாற்காலியில் அமர்ந்திருந்தான். வெளியே தெரு விளக்கின் மங்கலான ஒளி தரையில் சிதறி விழுந்துகொண்டிருந்தது. வீட்டுக்குள் அமைதி— ஆனால் அவன் மனசுக்குள் மட்டும் ஆயிரம் சத்தங்கள். "குழந்தை பிறக்கிறப்போ அது அழுதது… நாமெல்லாம் சிரிச்சோம்." அந்த வரி அவன் மனதில் திரும்பத் திரும்ப ஒலித்தது. பிறந்த நாள் நினைவுக்கு வந்தது. ஒரு காலத்தில் அவனும் அப்படித்தான்— அம்மாவின் மடியில், அப்பாவின் விரல்களை இறுக்கப் பிடித்துக்கொண்ட ஒரு சிறிய உயிர். முதல் பிறந்த நாள்… கையில் காசு இருந்ததோ இல்லையோ தெரியாது, ஆனால் வீட்டில் சந்தோஷம் நிரம்பி வழிந்தது. பந்தல், பலூன், இனிப்புகள்… அப்பா கடன் வாங்கியிருப்பார் என்று இப்போது புரிகிறது. அப்போ அது தெரியவில்லை. அந்த நாளெல்லாம் உலகமே அவனுக்காக நின்றது போல இருந்தது. பள்ளி நாட்கள். அப்பா வேலை முடிந்ததும் ஓடி வந்து அவனை கூட்டிச் செல்வது. பிக்னிக் போகலாம் என்று சொல்லி, தன் சோர்வை மறைத்து சிரிப்பது. புது ஷூ வாங்கித் தரும்போது, "இந்த மாதம் ஓவரா போச்சு" என்று சொல்லிவிட்டு, மறுநொடி அதை மறந்தது போல நடிப்பது. அப்புறம்… காலேஜ். அந்த இடத்தில்தான் எல்லாமே மாற ஆரம்பித்தது. "நாங்க இப்ப பெரியவங்க." "நாங்க முடிவு எடுப்போம்." "எங்களை வளர்த்தது உங்கள் கடமைதான்." அந்த வார்த்தைகள் நேரடியாக சொல்லப்படவில்லை… ஆனால் ஒவ்வொரு பார்வையிலும், ஒவ்வொரு அலட்சியமான பதிலிலும் அது தெரிந்தது. திருமணம். புது வாழ்க்கை. அப்பா அம்மா… மெதுவாக ஓரமாக நகர்த்தப்பட்டார்கள். செலவாக மாறினார்கள். மருத்துவ செலவு… மருந்து… டாக்டர்… ஒரு நாள் யாரோ சொன்ன வார்த்தை மனசில் ஊசி போல குத்தியது— "ஏன் இவங்க நம்ம கூட இருக்கணும்? OLD AGE HOME நல்லதுதானே…" அவன் கண்களை மூடிக்கொண்டான்.

**-Dr Harish Kumar**

## சிரிப்பு வருது.! சிரிப்பு வருது.!!



*"டி.வி.பார்க்கறது பெண்களுக்கு சகஜம்தானே…*

*இதையேன் பெரிசா சொல்றீங்க…?"*

*"அட! நீங்க ஒன்னு கரண்ட் இல்லைன்னாலும் டி.வியைப் பார்த்துக்கிட்டு உக்கார்ந்திருக்காங்க.!"*



# தினம் ஒரு சமையல்



## இறால் தொக்கு

**தேவையான பொருட்கள்:**

| | |
|---|---|
| பெரிய வெங்காயம் | நான்கு |
| தக்காளி | இரண்டு |
| மஞ்சள் தூள் உப்பு மிளகுத்தூள் | |
| மல்லி பொடி | |
| நல்லெண்ணெய் | |

**செய்முறை:**



முதலில் இறாலை சுத்தம் செய்து வைக்கவும்

இறாலை உப்பு, மஞ்சள் தூள், மிளகாய்த்தூள், இஞ்சி பூண்டு விழுது சேர்த்து ஊறவைக்கவும் ஒரு மணிநேரம் வரை

வாணலியில் எண்ணெய் விட்டு கடுகு கருவேப்பிலை வெங்காயம், உப்பு சேர்த்து பொன்னிறமாக வதக்கவும்,கீறிய பச்சை மிளகாய் அதன்பின் சிறிதாக நறுக்கிய தக்காளி சேர்த்து நன்றாக வதக்கவும்

வதங்கியவுடன் அதில் சிறிது மஞ்சள் தூள் இரண்டு ஸ்பூன் கொத்தமல்லித்தூள் நான்கு ஸ்பூன் மிளகாய்த்தூள் அரை டம்ளர் தண்ணீர் விடவும்

பச்சை வாடை போனவுடன் சுத்தம் செய்த இறாலை சேர்த்து ஐந்தில் இருந்து ஏழு நிமிடம் வரை மூடி போட்டு வேக வைக்க வேண்டும்

நிறைய நேரம் வேக வைக்கக்கூடாது இறாலை இல்லை என்றால் கடினமாக மாறிவிடும்

## மஞ்சள் பயன்கள்



மஞ்சள், பண்டைய காலங்களிலிருந்தே பாரம்பரிய மருத்துவத்தில் பயன்படுத்தப்படும் ஓர் அற்புதமான மூலிகை ஆகும். இதன் மஞ்சள் நிறத்திற்கு காரணமான குர்குமின் என்ற சக்திவாய்ந்த ஆன்டி-ஆக்ஸிடன்ட், மஞ்சளுக்கு பல நோய்களை தடுக்கும் மற்றும் குணப்படுத்தும் திறனை அளிக்கிறது.

மஞ்சளின் சில முக்கிய நன்மைகள் பின்வருமாறு:

1. அழற்சி எதிர்ப்பு: குர்குமின், வீக்கத்தை ஏற்படுத்தும் சைட்டோகின்களை தடுப்பதன் மூலம் சக்திவாய்ந்த அழற்சி எதிர்ப்பு பண்புகளைக் கொண்டுள்ளது. இதனால், கீல்வாதம், புற்றுநோய், மற்றும் இதய நோய் போன்ற அழற்சியுடன் தொடர்புடைய நோய்களின் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.
2. ஆன்டி-ஆக்ஸிடன்ட்: குர்குமின், ஆபத்தான மூலக்கூறுகளால் ஏற்படும் செல் சேதத்தைத் தடுக்கும் ஒரு சக்திவாய்ந்த ஆன்டி-ஆக்ஸிடன்ட் ஆகும். இதனால், இளவயதிலேயே வயதான தோற்றம், புற்றுநோய் மற்றும் பிற நோய்களின் அபாயத்தைக் குறைக்க உதவுகிறது.
3. மூளை ஆரோக்கியம்: குர்குமின், அல்சீமர் நோய் மற்றும் பிற நரம்பியல் நோய்களுக்கு எதிராகப் மூளையை பாதுகாக்கவும், மூளையின் அழற்சியைக் குறைக்கவும் உதவுகிறது.
4. செரிமான ஆரோக்கியம்: மஞ்சள், செரிமானத்தை மேம்படுத்தவும், வயிற்றுப்போக்கு மற்றும் வயிற்று வீக்கம் போன்ற செரிமான பிரச்சனைகளுக்கு சிகிச்சையளிக்கவும் உதவுகிறது.
5. நோய் எதிர்ப்பு சக்தி: மஞ்சள், நோய் எதிர்ப்பு மண்டலத்தை வலுப்படுத்தவும், தொற்றுநோய்களுக்கு எதிராகப் போராடவும் உதவுகிறது.
6. வலி நிவாரணி: மஞ்சள், இயற்கையான வலி நிவாரணியாக செயல்பட்டு, கீல்வாதம் மற்றும் தசை வலி போன்ற வலிகளுக்கு சிகிச்சையளிக்க உதவுகிறது.
7. ஆரோக்கியம்: மஞ்சளின் அழற்சி எதிர்ப்பு மற்றும் ஆன்டி-ஆக்ஸிடன்ட் பண்புகள், முகப்பரு, சரும அழற்சி மற்றும் பிற சரும பிரச்சனைகளுக்கு சிகிச்சையளிக்க உதவுகின்றன. மஞ்சளின் ஆன்டி-ஆக்ஸிடன்ட்டுகள் மற்றும் எதிர்ப்பு குணங்கள் சரும பருக்கள் மற்றும் நிறமாற்றங்களை குறைக்க உதவுகின்றன.
8. குழந்தைக்கான நன்மைகள்: குழந்தைகளுக்கான ஜீரண பிரச்னைகள், நுரையீரல் சுருக்கம் போன்ற பிரச்னைகளுக்கு மஞ்சள் பால் தரலாம். இது சிறுநீரகத்தின் சுகாதாரத்தையும் மேம்படுத்தும்.
9. ஆக்னி (ACNE): முகத்தில் ஏற்படும் ஆக்னி பிரச்சினையை மஞ்சள் பயன்படுத்தி எளிதாக சரி செய்யலாம். இதனை முகத்தில் FACE PACK ஆக பயன்படுத்துவதன் மூலம் பருக்கள் மற்றும் ஆக்னி பிரச்சனைகளுக்கு தீர்வு காணலாம்.

# அல்லு அர்ஜுனை சந்திக்க 42 ரூல்ஸ்.. சர்ச்சையை கிளப்பியவர் மீது வழக்கு தொடர்ந்த நடிகர்



நடிகர் அல்லு அர்ஜுன் தெலுங்கு சினிமாவில் முன்னணி ஹீரோவாக இருப்பவர். புஷ்பா படம் இந்திய அளவில் ஹிட் ஆன பிறகு அவர் PAN இந்தியா ஸ்டார் ஆகிவிட்டார்.

அல்லு அர்ஜுனை நேரில் சந்திக்க வேண்டும் என்றால் அவரது டீம் 42 கண்டிஷன்கள் போடுவதாக பெண் ஒருவர் கொடுத்த பேட்டி வைரல் ஆகி இருக்கிறது.

பிராண்ட் மேனேஜர் Kaveri Baruah என்ற பெண் அளித்த பேட்டியில், அல்லு அர்ஜுனின் மேனேஜருக்கு மேனேஜருக்கு மேனேஜர் என பல லெவலில் இருக்கிறார்கள். அவர்கள் ரொம்ப ஸ்ட்ரிக்ட். அல்லு அர்ஜுனை சந்திக்க வேண்டும் என்றால் அவர் கண்ணை பார்த்து பேச கூடாது, கைகளை குலுக்க கூடாது என்றெல்லாம் லிஸ்ட் கொடுத்தார்கள் என அவர் கூறி இருந்தார்.

இந்நிலையில் அல்லு அர்ஜுன் தரப்பு இது பொய் என கூறி அந்த பெண் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்போவதாக அறிக்கை வெளியிட்டு இருக்கின்றனர்.






யாஷிகா தற்போது வெறும் பூக்கள் மற்றும் பிளாஸ்டிக் கவரை வைத்து உடையாக சுற்றிக்கொண்டு மிக கவர்ச்சியாக போட்டோஷூட் எடுத்து இருக்கிறார். அதை பார்த்து ரசிகர்கள் ஆச்சர்யம் அடைந்து இருக்கின்றனர்.

# நடிகர் விஷ்ணு விஷாலின் அக்கா யார் தெரியுமா? இவ்வளவு பெரிய பதவியில் இருக்கிறாரா




நடிகர் விஷ்ணு விஷால் கோலிவுட்டில் முன்னணி ஹீரோக்களில் ஒருவராக இருப்பவர். வெண்ணிலா கபடி குழு படம் தொடங்கி கடந்த வருடம் ரிலீஸ் ஆன ஆர்யன் படம் வரை பல குறிப்பிடத்தக்க வெற்றி படங்களை அவர் கொடுத்திருக்கிறார்.

விஷ்ணு விஷாலின் தம்பி ருத்ராவும் ஹீரோவாக தமிழ் சினிமாவில் அறிமுகம் ஆகி இருக்கிறார். அவர் ஹீரோவாக நடித்த ஓஹோ எந்தன் பேபி என்ற படம் கடந்த வருடம் ரிலீஸ் ஆகி இருந்தது.

விஷ்ணு விஷாலுக்கு ஒரு அக்கா இருக்கிறார். ஆனால் அவர் சினிமா பக்கம் வராமல் படிப்பில் மட்டுமே கவனம் செலுத்தினாராம். 10ம் வகுப்பில் மாநில அளவில் முதலிடம் பிடித்தாராம் அவர்.

எஞ்சினியரிங் படித்துவிட்டு, IIMல் அவருக்கு சீட் கிடைத்ததாம். தற்போது அவர் சர்வதேச அளவில் பிரபலமான ஒரு தனியார் வங்கியின் Southeast Asia head ஆக பணியாற்றி வருகிறாராம்.

# புண்ணியம் தேடுவோம்

டிசம்பர் மாதம் முதல் நாள், தமிழ் மாதம் கார்த்திகை 16 ம் நாள் விருச்சிக மாதம் 15 ம் நாள் குருவாயூர் ஏகாதசி கைசிக ஏகாதசி ,மோக்ஷ ஏகாதசி, பிரபோதினி ஏகாதசி என பல பெயர்களில் பக்தர்களால் அனுசரிக்கப் படும் தினம்.

ஏகாதசி என்று அழைக்கப்படும் நாளானது, பௌர்ணமி மற்றும் அமாவாசை நாட்களுக்கு இடையிலே பதினொன்றாம் நாளைக் குறிப்பதாகும். இது பதினைந்து நாட்களுக்கு ஒரு முறை வரும், முக்கியமான விரத நாளாகும். வருடத்தில் மொத்தம் 24 ஏகாதசிகள் நிகழ்கின்றன.
குருவாயூர் ஏகாதசி நாள் கார்த்திகை/விருச்சிக மண்டல காலத்தில் வரும் ஏகாதசியாகும். இந்த புண்ணிய தினத்தின் முக்கியத்துவத்தைக் காண்போம்.



க்ஷீரசாகரத்தில் அனந்தசயனனாக பள்ளி கொள்ளும் பகவான் யோகநித்திரையிலிருந்து எழுந்து லஷ்மி தேவியோடு நம்மை அனுக்கிரகிக்கும் மகா புண்ணிய தினம்.
அறநெறியையும், அறநெறியில் உள்ளவர்களையும் காக்கவும்,அதர்மத்தையும், அதர்ம வழியில் உள்ளவர்களையும் அழிக்கவும் பகவான் அவதாரம் செய்கிறார்.

அவ்வண்ணமே பூரண அவதாரம் எடுத்த ஸ்ரீகிருஷ்ண பகவான் பல அவதார லீலைகள் செய்த புண்ணிய தினம்.

பகவத்கீதையை அருச்சுனனுக்கு பகவான் உபதேசம் செய்த புண்ணிய தினம்.

தேவேந்திரன் சுரபியாகிய காமதேனுவுடன் பிருந்தாவனத்தை அடைந்து பகவானை துதித்தும், காமதேனு பால் சுரந்து கோவிந்தாபிஷேகம் நடத்திய மகா புண்ணிய தினம்.
குருவாயூர்க்ஷேத்திரப் பிரதிஷ்டா தினம்.

அத்வைதத்தின் குருவும், சைவ அவதாரமுமான ஆதிசங்கரர் குருவாயூர் கோவிலில் வந்து, இன்று நடைபெறும் பூஜா நிஷ்டைகளை உருவாக்கிக் கொடுத்த மகா புண்ணிய தினம்
குருவாயூர் கோவிலில் தாந்த்ரீக சடங்குகள் ஒன்றும் இல்லாமல் பகவான் பக்த ஜனங்களை நேரில் வந்து அனுக்கிரகம் செய்ய வெளியே வரும் புண்ணிய தினம்.

பக்தரில் உத்தமர்களாகிய மேல்பத்தூர், பூந்தானம், ஆதிசங்கரர், குரூரம்மா, வில்வமங்கலம் சுவாமிகள் போன்றவர்களுக்கு பகவத் தரிசனம் கொடுத்த மகா புண்ணிய தினம்.

செம்பை வைத்தியநாத பாகவதருக்கு இழந்த குரலை மீண்டும் பகவான் அருளிய மகா புண்ணிய தினம்.
செம்பை வைத்தியநாத பாகவதர் தனது சீடர்களுடன் குருவாயூரில் வந்த சங்கீத ஆராதனை நடத்திய மகா புண்ணிய தினம்.
இன்றும் ஆராதனை நடந்து வருகிறது.


குருவாயூர் ஸ்ரீகோவில் இன்று முழுவதும் தரிசனத்துக்காக திறந்திருக்கும் புண்ணிய தினம்.

பக்தர்கள் ஆராதிக்கும் , பகவானின் அருள் கொண்ட குருவாயூர் கேசவன் என்னும் யானை பகவானை அடைந்த தினம்.

மேல்பத்தூர் பட்டத்திரிப்பாடு தான் எழுதிய நாராயணீயம் என்னும் கிரந்தத்தை பகவானுடைய சன்னதியில் சமர்ப்பணம் செய்த மகா புண்ணிய தினம்.

கார்த்திகை — வளர்பிறை ஏகாதசி — பிரபோதின ஏகாதசி-- கைசிக ஏகாதசி — அனைத்துப் பழங்களையும் பகவானுக்கு நிவேதனம் செய்து நவ வித பக்தியால் இறைவனை வேண்டிக் கொண்டால் இறையருளுடன் மங்கல வாழ்வு மலரும்.

ஏகாதசி விளக்கு என பதினைந்து நாட்கள் குருவாயூர் கோவிலில் கோலாகலமாக நடக்கும் இந்த குருவாயூர் ஏகாதசி மகத்துவம் அறிந்து, விரத விதிகளை பாராட்டி அனுசரித்து
'நான்''எனது'என்ற அகந்தை இல்லாமல் 'சர்வம் கிருஷ்ணார்ப்பணம்' என்ற கோவிந்த நாமத்தை வணங்கி நற்கதி பெறுவோம்.



சோபனா விச்வநாதன்.

# தினம் ஒரு தலைவர்கள்

# சாவித்ரி தேவி முகர்ஜி வரலாறு

சாவித்ரி தேவி முகர்ஜி 1905 ஆம் ஆண்டு லியோனில் மாக்சிமியானி ஜூலியா போர்டாஸ் என்ற பெயரில் பிறந்த சாவித்ரி தேவி, கிரேக்க மற்றும் இத்தாலிய வம்சாவளியைச் சேர்ந்த பிரெஞ்சு குடிமகனான மாக்சிம் போர்டாஸ் மற்றும் ஜூலியா போர்டாஸ் (நீ நாஷ்) என்ற ஆங்கிலப் பெண்ணின் மகள் ஆவார் . குழந்தை பருவத்திலிருந்தே மற்றும் அவரது வாழ்நாள் முழுவதும், அவர் விலங்கு உரிமைகளுக்காக தீவிர ஆதரவாளராக இருந்தார் . அவரது ஆரம்பகால அரசியல் தொடர்புகள் கிரேக்க தேசியவாதத்துடன் இருந்தன . தனது இளமை பருவத்தில் அவர் ஜெர்மன் தத்துவம் மற்றும் ஜெர்மனியில் ஆர்வம் கொண்டிருந்தார்; முதலாம் உலகப் போரின் முடிவில் ஜெர்மனியின் சிகிச்சையாலும் , கிரேக்க அகதிகளை ஒரே நேரத்தில் நடத்தியதாலும் அவர் கலக்கமடைந்தார். ஜெர்மனியின் தோல்விக்கு யூதர்களைக் குற்றம் சாட்டினார்.

கிரீஸ் மற்றும் பிரான்சில் கல்வி கற்ற போர்டாஸ், தத்துவம் மற்றும் வேதியியலைப் பயின்றார், லா சிம்ப்ளிசிட் கணிதமேடிக் என்ற தனது ஆய்வறிக்கையின் அடிப்படையில் லியோன் பல்கலைக்கழகத்தில் தத்துவம் மற்றும் அறிவியலில் இரண்டு முதுகலைப் பட்டங்களையும் , வேதியியலில் முனைவர் பட்டத்தையும் பெற்றார் . அடுத்து அவர் கிரேக்கத்திற்குச் சென்று, புகழ்பெற்ற இடிபாடுகளை ஆய்வு செய்தார். இங்கே , ஹென்ரிச் ஷ்லிமேன் அனடோலியாவில் ஸ்வஸ்திகாக்களைக் கண்டுபிடித்ததைப் பற்றி அவர் அறிந்தார் . பண்டைய கிரேக்கர்கள் ஆரிய வம்சாவளியைச் சேர்ந்தவர்கள் என்பது அவரது முடிவு . அவரது முதல் இரண்டு புத்தகங்கள் அவரது முனைவர் பட்ட ஆய்வுக் கட்டுரைகள் : எஸ்ஸை-கிரிட்டிக் சுர் தியோஃபில் கைரிஸ் மற்றும் லா சிம்ப்ளிசிட் கணிதமேடிக் . பைபிள் மீதான வெறுப்பாலும், பின்னர் பாலஸ்தீனத்தில் சியோனிச நடவடிக்கைகளாலும் செல்வாக்கு பெற்ற அவர், இளம் வயதிலேயே யூத எதிர்ப்பாளராக மாறினார். 1928 ஆம் ஆண்டின் முற்பகுதியில், போர்டாஸ் தனது பிரெஞ்சு குடியுரிமையைத் துறந்து கிரேக்க குடியுரிமையைப் பெற்றார் . 1929 ஆம் ஆண்டில் (அரேபியர்களுக்கும் யூதர்களுக்கும் இடையிலான மோதல் ஒரு



வருடம்) அவர் லென்ட் காலத்தில் பாலஸ்தீனத்தின் பிரிட்டிஷ் ஆணைக்கு ஒரு யாத்திரையில் சேர்ந்தார், இது அவரது நம்பிக்கைகளை வலுப்படுத்தியது. போர்டாஸ் தனது யூத எதிர்ப்பில் பல்வேறு பிரெஞ்சு அறிவுஜீவிகளாலும் செல்வாக்கு பெற்றார், அவர்களுடன் யூத எதிர்ப்பு மிகுதியாக இருந்தது; அவர் குறிப்பாக எர்னஸ்ட் ரெனனால் பாதிக்கப்பட்டார்.

இரண்டாம் உலகப் போருக்குப் பிறகு , அவர் 1945 ஆம் ஆண்டு சாவித்ரி தேவி முகர்ஜி என்ற பெயரில் இந்தியாவைச் சேர்ந்த ஒரு பிரிட்டிஷ் குடிமகனின் மனைவியாக, பிரிட்டிஷ் இந்திய பாஸ்போர்ட்டுடன் இங்கிலாந்து சென்றார் . அவர் இங்கிலாந்தில் சிறிது காலம் தங்கினார், பின்னர் பிரான்சில் உள்ள தனது தாயாரைச் சந்தித்தார், அவருடன் பிரெஞ்சு எதிர்ப்புக்கு பிந்தையவரின் ஆதரவு குறித்து அவர் சண்டையிட்டார். பின்னர் அவர் ஐஸ்லாந்துக்குச் சென்றார் , அங்கு 1947 ஏப்ரல் 5-6 தேதிகளில் ஹெக்லா மலை வெடிப்பதைக் கண்டார். ஐஸ்லாந்தில் இருந்தபோது, அவர் நார்ஸ் தேவாலயத்தையும் ஏற்றுக்கொண்டார். அவர் சிறிது காலம் இங்கிலாந்துக்குத் திரும்பினார், பின்னர் அவர் ஸ்வீடனுக்குப் பயணம் செய்தார் , அங்கு அவர் ஸ்வென் ஹெடினைச் சந்தித்தார் .

ஜூன் 15, 1948 அன்று, அவர் நோர்ட்-எக்ஸ்பிரஸில் ஏறி டென்மார்க்கிலிருந்து ஜெர்மனிக்குச் சென்றார், அங்கு அவர் "ஜெர்மனியின் ஆண்களும் பெண்களும்" "நமது புகழ்பெற்ற தேசிய சோசலிச நம்பிக்கையைப் பற்றிப்பிடித்து எதிர்க்க" ஊக்குவித்த கையால் எழுதப்பட்ட துண்டுப்பிரசுரங்களின் ஆயிரக்கணக்கான பிரதிகளை விநியோகித்தார்! அவர் கோல்ட் இன் தி ஃபர்னஸில் தனது அனுபவத்தை விவரித்தார்.

1970களின் பிற்பகுதியில், அவருக்கு கண்புரை நோய் ஏற்பட்டது , இதன் விளைவாக அவரது பார்வை வேகமாக மோசமடைந்தது. இந்தியாவில் உள்ள பிரெஞ்சு தூதரகத்தின் எழுத்தரான மிரியம் ஹிர்ன், அவரை அடிக்கடி வீட்டிற்குச் சென்று கவனித்துக் கொண்டார். அவர் இந்தியாவை விட்டு வெளியேற முடிவு செய்து, 1981 இல் ஜெர்மனிக்குத் திரும்பி பவேரியாவில் வசித்து, 1982 இல் பிரான்சுக்குத் திரும்பினார். சாவித்ரி 1982 ஆம் ஆண்டு இங்கிலாந்தின் எசெக்ஸில் உள்ள சிபிள் ஹெடிங்ஹாமில் ஒரு நண்பரின் வீட்டில் இறந்தார். அவரது மரணத்திற்கான காரணம் மாரடைப்பு மற்றும் கரோனரி த்ரோம்போசிஸ் என பதிவு செய்யப்பட்டது . அவர் இறக்கும் போது மாட் கோஹலின் அழைப்பின் பேரில் அமெரிக்காவில் விரிவுரை செய்யச் சென்று கொண்டிருந்தார். அவரது உடல் எசெக்ஸின் கோல்செஸ்டரில் ஒரு எளிய விழாவில் தகனம் செய்யப்பட்டது , இதில் டோனி வில்லியம்ஸ் மற்றும் இரண்டு இளம் பிரிட்டிஷ் நாஜிக்கள் கலந்து கொண்டனர். தேவியின் அஸ்தி ஒரு பொறிக்கப்பட்ட கலசத்தில் வர்ஜீனியாவின் ஆர்லிங்டனில் உள்ள அமெரிக்க நாஜி கட்சியின் தலைமையகத்திற்கு அனுப்பப்பட்டது, பின்னர் அவை எடுத்துச் செல்லப்பட்டு விஸ்கான்சினின் மில்வாக்கியில் உள்ள "நாஜி மரியாதை மண்டபத்தில்" ஜார்ஜ் லிங்கன் ராக்வெல்லின் அஸ்திக்கு அடுத்ததாக மாட் கோஹலால் வைக்கப்பட்டதாகக் கூறப்படுகிறது . அவர் இறக்கும் போது அவர் மிகவும் ஏழையாக இருந்ததாகக் கூறப்படுகிறது.
வாழ்க்கையில், தேவிக்கு சில சாதனைகள் மட்டுமே இருந்தன (குறைந்தபட்சம் நாசிசத்தை மீண்டும் தொடங்குவதற்கான அவரது இலக்குகளுடன் ஒப்பிடும்போது), ஆனால் அவரது எழுத்து நவ-நாஜி இயக்கத்தை, குறிப்பாக எஸோதெரிக் நவ-நாசிசத்தை பெரிதும் பாதித்து வருகிறது . கல்வியாளர் ஜெஃப்ரி கப்லான், தேவி "போருக்குப் பிந்தைய தேசிய சோசலிசத்தின் இடிபாடுகளில் இருந்து வெளிவந்த மிகவும் கட்டாய நபர்களில் ஒருவர்" என்று விவரித்தார், மேலும் நவ-நாஜி மறைபொருள் மீதான அவரது செல்வாக்கை "எந்தவொரு நபரை விடவும் அதிகமாக" குறிப்பிட்டார்.
அவரது படைப்புகள் ஆல்ட்-ரைட் , அத்துடன் புதிய யுக மதம் மற்றும் ஆழமான சூழலியல் ஆகியவற்றையும் பாதித்துள்ளன . அவரது எழுத்துக்களுக்கு மேலதிகமாக, பல தீவிர வலதுசாரிகளுடனான அவரது கடிதப் போக்குவரத்து நவ-நாஜி இயக்கத்திற்கு குறிப்பிடத்தக்க செல்வாக்கு செலுத்தியது.
அவர் சிலி நாட்டுத் தூதர் மிகுவல் செரானோவையும் பாதித்தார் , மேலும் அவரது ஹோலோகாஸ்ட் மறுப்பு எர்ன்ஸ்ட் ஜூண்டலைப் பாதித்தது . 1982 ஆம் ஆண்டில், பிராங்கோ ஃப்ரெடா தனது படைப்பான கோல்ட் இன் தி ஃபர்னஸின் ஜெர்மன் மொழிபெயர்ப்பை வெளியிட்டார் , மேலும் அவரது வருடாந்திர மதிப்பாய்வின் நான்காவது தொகுதியான ரிஸ்கார்டோ (1980), சாவித்ரி தேவிக்கு "ஆரிய புறமதத்தின் மிஷனரி " என்று அர்ப்பணிக்கப்பட்டது .

# திடீரென முடங்கிய யுபிஐ சேவை: பயனர்கள் அவதி!



புதுடெல்லி, பிப்.12: யுபிஐ மின்னணு பரிவர்த்தனை சேவை இன்று(பிப். 10) மாலை திடீரென முடங்கியதால் இன்னொருவருக்கு பணம் அனுப்புதல், க்யூ.ஆர். கோடு ஸ்கேன் செய்தல் உள்பட பல யுபிஐ சேவைகள் மேற்கொள்ள இயலவில்லை. கூகுள்பே, போன்பே, பேடிஎம் உள்பட பல தளங்களிலும் இந்தப் பிரச்னை இன்று மாலை 7 மணியளவில் எதிரொலித்தது.

இதைத்தொடர்ந்து பெரும்பாலான சமூக ஊடக தளங்களிலும் இது குறித்து பயனர்கள் புகார் தெரிவித்து பதிவுகள் பல வெளியிட்டதைப் பார்க்க முடிந்தது.

தில்லி, மும்பை, சென்னை, கொல்கத்தா, ஹைதராபாத், பெங்களூரு ஆகிய பெருநகரங்களில் யுபிஐ சேவை கடுமையாகவே பாதிக்கப்பட்டதாக பயனர்கள் தெரிவிக்கின்றனர். இதனால் நேரடியாக பணம் செலுத்தும் நிலைக்கு தள்ளப்பட்டதாக பயனர்கள் தெரிவித்தனர்.

# மோடி இருக்கையை முற்றுகையிட்ட காங்கிரஸ் எம்.பி.க்கள் - வீடியோ வெளியிட்ட மத்திய அமைச்சர்



புதுடெல்லி, பிப்.12: லோக்சபாவில் காங்கிரஸ் உள்ளிட்ட எதிர்க்கட்சி எம்.பி.க்கள் பிரதமர் மோடியை "நேரடியாகத் தாக்க" திட்டமிட்டிருந்ததாக தனக்கு உறுதியான தகவல் கிடைத்ததாகச் சபாநாயகர் ஓம் பிர்லா இன்று தெரிவித்தார்.

பிரதமரின் பாதுகாப்பு கருதியே அவரது பதிலுரை ரத்து செய்யப்பட்டதாகவும், எதிர்க்கட்சி பெண் எம்.பி.க்களை கேடயமாகப் பயன்படுத்தி இந்தத் தாக்குதல் திட்டமிடப்பட்டிருந்ததாக ஓம் பிர்லா தெரிவித்தார்.


பிரதமர் மோடியை தாக்க எதிர்க்கட்சிகள் சதி செய்துள்ளதாக சபாநாயகர் ஓம் பிர்லா கூறியது பெரும் பரபரப்பை ஏற்படுத்தியது.

இந்நிலையில், பிரதமர் மோடியின் இருக்கைக்கு அருகே காங்கிரஸ் எம்.பி.க்கள் முற்றுகையிடும் வீடியோவை மத்திய அமைச்சர் கிரண் ரிஜிஜு வெளியிட்டுள்ளார்.

அந்த பதிவில், "காங்கிரஸ் கட்சி தங்கள் எம்.பி.க்களின் மிகவும் இழிவான நடத்தையைப் பற்றி பெருமை கொள்கிறது. நாடாளுமன்றத்தின் கண்ணியத்தையும்புனிதத்தையும் பாதுகாப்பதில் நாங்கள் மிகுந்த அக்கறை கொண்டுள்ளோம்" என்று தெரிவித்தார்.

# பிரான்ஸ் அதிபர் மேக்ரான் 3 நாள் பயணமாக அடுத்த வாரம் இந்தியா வருகிறார்

புதுடெல்லி, பிப்.12:



பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் 3 நாள் சுற்றுப் பயணமாக அடுத்த வாரம் இந்தியா வருகிறார். இந்தியாவில் நடைபெறும் ஏ.ஐ. உச்சி மாநாடு (AI Impact Summit) மாநாட்டில் கலந்து கொள்கிறார். வர்த்தகம் மற்றும் பாதுகாப்பு போன்ற முக்கிய துறையில் இருநாட்டு உறவுகளை மேம்படுத்தும் வகையில் இந்திய பிரதமர் மோடியுடன் பேச்சுவார்த்தை நடத்துகிறார்.

பிப்ரவரி 17-ந்தேதி மும்பையில் இருந்து தனது சுற்றுப் பயணத்தை தொடங்குகிறார். பிரதமர் மோடியுடன் சேர்ந்து இந்தியா- பிரான்ஸ் Year of Innovation-ஐ தொடங்கி வைக்கிறார். அதனைத் தொடர்ந்து மும்பையில் இருவரும் பேச்சுவார்த்தையில் ஈடுபடுவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது.

பின்னர் டெல்லியில் பிப்ரவரி 19-ந்தேதி நடைபெறும் ஏ.ஐ, உச்சிமாநாட்டில் கலந்து கொள்கிறார். கடந்த ஆண்டு பிப்ரவரி மாதம் பிரதமர் மோடி பிரான்ஸ் சென்றிருந்தார். அதனைத் தொடர்ந்து மேக்ரானின் சுற்றுப்பயணம் அமைய இருக்கிறது.

# மருத்துவமனையில் பிறந்து ஒரு மணி நேரமே ஆன பெண் குழந்தை தீயில் கருகி உயிரிழந்த சோகம்!

கான்பூர், பிப்.12: உத்தரபிரதேச மாநிலம் கான்பூரில் தனியார் மருத்துவமனையில் பிறந்து ஒரு மணி நேரமே ஆன பெண் குழந்தை ஒன்று தீயில் கருகி உயிரிழந்திருப்பது பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

கான்பூரில் உள்ள பக்கர்கஞ்சில் வசிக்கும் அருண் நிஷாத் மற்றும் அவரது மனைவி பிட்டு ஆகியோருக்கு பெண் குழந்தை பிறந்துள்ளது.

பிறந்த குழந்தையின் உடல் வெப்பநிலையைச் சரியாகப் பராமரிக்க உதவும் கருவியில் குழந்தை வைக்கப்பட்டது. அப்போது மின் கசிவு ஏற்பட்டு தீ பிடித்ததில், அதிலிருந்த குழந்தை தீ காயம் ஏற்பட்டு உயிரிழந்திருக்கிறது.

இந்தசம்பவத்தைப்பலமணி நேரம் கழித்தேபெற்றோருக்குத் தெரியப்படுத்தியுள்ளது மருத்துவமனை நிர்வாகம். இதனால் ஆத்திரமடைந்த உறவினர்கள் மருத்துவமனைக்கு வெளியே கூடி போராட்டத்தில் ஈடுபட்டனர்.

இதையடுத்து இந்த சம்பவத்தை குறித்து விசாரிக்க 3 பேர் கொண்ட குழு அமைத்து காவல்துறை விசாரணை மேற்கொண்டு வருகிறது.

# சொகுசு கார் விபத்து : தொழிலதிபர் மகன் காரை ஓட்டவில்லை! சரணடைகிறார் ஓட்டுநர்?



கான்பூர், பிப்.12: உத்தரப் பிரதேசத்தில் அதிவேகமாகச் சென்ற சொகுசு கார் மோதி 6 பேர் படுகாயமடைந்த விவகாரத்தில் காரை ஓட்டிச்சென்றது தொழிலதிபரின் மகன் அல்ல எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

சொகுசுக் காரை ஓட்டுநர் மோகன் ஓட்டிச்சென்றதாகவும், விரைவில் அவர் சரணடைவார் என்றும் காவல் துறையிடம் தெரிவிக்கப்பட்டுள்ளது.

உத்தரப் பிரதேச மாநிலம் கான்பூரிலுள்ள குவால்டோலி பகுதியில் பிரபல தொழிலதிபரான கே.கே. மிஸ்ராவின் மகன் அதிவேகமாக ஓட்டிய சொகுசுக் கார் கட்டுப்பாட்டை இழந்து பாதசாரிகள் மீது மோதியதில் 6 பேர் படுகாயம் அடைந்தனர்.

புகையிலை தயாரிப்பு நிறுவனத்தை நடத்தி வரும் கே.கே.மிஸ்ராவின் மகன் ஷிவம் மிஸ்ரா, கான்பூரில் ஞாயிற்றுக்கிழமை பகல் 3.15 மணியளவில் லம்போர்கினி காரில் அதிவேகமாகச் சென்று விபத்து நேர்ந்துள்ளது.

அப்போதுகட்டுப்பாட்டை இழந்த கார் ஆட்டோ மற்றும் இருசக்கர வாகனத்தின் மீது முதலில் மோதி, பின்னர் சாலையோரம் இருந்த பாதசாரிகள் மீது மோதியது. இந்த விபத்தில் 6 பேர் படுகாயம் அடைந்து மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

விபத்து நடந்தவுடன் ஷிவம் மிஸ்ரா தப்ப முயற்சித்ததாகவும், காரின் கண்ணாடியை உடைத்த மக்கள் அவரை தாக்க முயற்சித்ததாகவும்சம்பவத்தை நேரில் பார்த்தவர்கள் தெரிவித்தனர்.


காவல் துறையினர் பறிமுதல் செய்த சிசிடிவி காட்சிகள் மற்றும் விபத்தை நேரில் பார்த்தவர்கள் கூறிய தகவல்களின் அடிப்படையில் தொழிலதிபரின் மகன் ஷிவம் மிஸ்ரா காரை ஓட்டிச் சென்றது தெரியவந்துள்ளது.

எனினும், தொழிலதிபரின் குடும்பத்தினர் இதனை மறுத்துள்ளனர். விபத்து நேர்ந்தபோது புதிதாக சேர்ந்த ஓட்டுநர் துரை என்பவர் காரை ஓட்டிச்சென்றதாகத் தெரிவித்துள்ளனர்.

விபத்தைஏற்படுத்தியதாகக் கூறப்படும் ஓட்டுநர் துரை, இதுபோன்ற பல்வேறு தொழிபதிபர்கள் மற்றும் பிரபலங்களின் சொகுசுக் கார் விபத்துகளில் தொடர்புடையவர் என விசாரணையில் தெரியவந்துள்ளது குறிப்பிடத்தக்கது.

# 'நானும் நிர்பயாபோல இறந்திருந்தால் அனைவரும் நம்பியிருப்பார்கள்' - பாதிக்கப்பட்ட உன்னாவ் பெண் வேதனை

புதுடெல்லி, பிப்.12:



உன்னாவ் பாலியல் வன்கொடுமை வழக்கில் பாதிக்கப்பட்ட பெண்ணின் தந்தை காவல் மரணமடைந்த வழக்கில் தனக்கு விதிக்கப்பட்ட 10 ஆண்டு சிறை தண்டனையை நிறுத்தி வைக்கக்கோரி குற்றவாளி குல்தீப் சிங் செங்கார் தாக்கல் செய்த மனுவை உச்ச நீதிமன்றம் நேற்று தள்ளுபடி செய்தது.

செங்காரின் மேல்முறையீட்டு மனுவை முன்னுரிமை அடிப்படையில் விசாரித்து, மூன்று மாதங்களுக்குள் இறுதி தீர்ப்பு வழங்குமாறு டெல்லி உயர் நீதிமன்றத்திற்கும் உத்தரவிட்டுள்ளது. முன்னதாக, பாலியல் வன்கொடுமை வழக்கில் அவருக்கு வழங்கப்பட்ட ஆயுள் தண்டனையை நிறுத்தி வைத்து பிணை வழங்கிய உயர் நீதிமன்ற உத்தரவுக்கும் உச்ச நீதிமன்றம் இடைக்காலத் தடை விதித்திருந்தது.

இந்நிலையில் உச்ச நீதிமன்றத்தில் இந்த முடிவால் தான் நிம்மதி அடைந்துள்ளதாகவும், எட்டு ஆண்டுகளாக நீதி கிடைக்கப் போராடி வருவதாகவும் பாதிக்கப்பட்ட பெண் தெரிவித்துள்ளார். உச்ச நீதிமன்றத்தின் நேற்றைய தீர்ப்பு தொடர்பாக பேசிய அவர்,

"இன்று நான் உச்ச நீதிமன்றத்திற்குச் சென்றேன். நீதிபதி தீர்ப்பளித்தபோது நான் நீதிமன்றத்தில் இருந்தேன். இந்தத் தீர்ப்பில் நான் மிகவும் மகிழ்ச்சியடைகிறேன். விசாரணையை 3 மாதங்களுக்குள் விரைவில் முடிக்க நீதிபதி உத்தரவிட்டதில் நான் திருப்தி அடைகிறேன். என் தந்தை திரும்பி வரப்போவதில்லை. குல்தீப் செங்காரின் சகோதரர்கள் அதுல் சிங் செங்கார் மற்றும் ஜெய்தீப் சிங் செங்கார் ஆகியோர் என் தந்தையைக் கொன்றனர்.

அவர்கள் மருத்துவ சிகிச்சைக்காக சிறையில் இருந்து வெளியே வந்துள்ளனர். சம்பந்தப்பட்ட அனைத்து காவல்துறை அதிகாரிகளும் வெளியே உள்ளனர். குல்தீப் சிங் செங்காரைப் பொறுத்தவரை, அவர் எனக்கு எதிராக ஒரு கொடூரமான செயலைச் செய்துள்ளார். அவர் என்னை பாலியல் வன்கொடுமை செய்தார். நான் அதை எப்படி நிரூபிக்க முடியும்? நான் உயிருடன் இருக்கிறேன் என்பதற்காக அதை செய்யவேண்டுமா?

நானும் நிர்பயா மாதிரி இறந்திருந்தால், நான் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டேன் என்று எல்லோரும் நம்பியிருப்பார்கள். நான் உயிருடன் இருக்கிறேன். எனக்கு என்ன நடந்தது என்பதை நிரூபிக்க பல வருடங்கள் ஆனது. நான் 8 வருடங்களாக போராடி வருகிறேன். இப்போதும் கூட, நான் பாலியல் வன்கொடுமை செய்யப்பட்டேன் என்பதை நிரூபிக்க வேண்டும்.

அவரது மகள் இது ஒரு சாதாரண விபத்து என்று கூறினார். விபத்து சாதாரணமானதா என்று எனக்குத் தெரியவில்லை. நான் வென்டிலேட்டரில் இருந்தேன். என் தந்தைக்கு உச்ச நீதிமன்றம் நீதி வழங்க வேண்டும் என்று நான் கோரிக்கை விடுத்துள்ளேன். என் தந்தையின் ஆன்மா சாந்தியடையவும், அவருக்கு நீதி கிடைக்கவும் குல்தீப் செங்காரை தூக்கிலிட வேண்டும்." என தெரிவித்துள்ளார்.

# "பாபர் மசூதியை மீண்டும் ஒருபோதும் கட்ட முடியாது" - யோகி ஆதித்யநாத் உறுதி



பாராபங்கி, பிப்.12: "பாபர் மசூதியை மீண்டும் ஒருபோதும் கட்ட முடியாது. அதைப் பற்றி கனவு காண்பவர்கள் நாட்டின் சட்டத்திற்குக் கீழ்ப்படிய வேண்டும்" என்று உத்தரப் பிரதேச முதல்வர் யோகி ஆதித்யநாத் எச்சரித்தார்.

உத்தரப் பிரதேச மாநிலம் பாராபங்கியில் நடைபெற்ற ஒரு கூட்டத்தில் உரையாற்றிய முதல்வர் யோகி ஆதித்யநாத், "பாபர் மசூதியை கட்ட கனவு காண்பவர்களுக்கு, அந்த தீர்ப்பு நாள் (judgement day) ஒருபோதும் வராது என்று நான் அவர்களிடம் கூற விரும்புகிறேன். எனவே அந்தத் தீர்ப்பு நாளுக்காக வாழாதீர்கள்.

இந்தியாவில் உள்ள விதிகளின்படி வாழ கற்றுக் கொள்ளுங்கள். நாட்டின் சட்டத்திற்குக் கீழ்ப்படியுங்கள். யாராவது விதிகளை மீறினால், அந்தப் பாதை அவர்களை நேராக நரகத்திற்கு இட்டுச் செல்லும். சட்டங்களை மீறி சொர்க்கம் செல்வதாக யாராவது கனவு கண்டால், அவர்களின் கனவு ஒருபோதும் நனவாகாது" என்றார்.

மேலும், "சில சந்தர்ப்பவாதிகள் நெருக்கடிகளை எதிர்கொள்ளும்போது ராமரை நினைவில் கொள்கிறார்கள், பின்னர் அவரை மறந்துவிடுகிறார்கள். எனவே, ராமரும் அவர்களை மறந்துவிட்டார். அவர்களால் இப்போது வெற்றி பெற முடியாது. ஒருபோதும் முன்னேறவும் முடியாது" என்று அவர் கூறினார்.

# மேற்கு வங்கத்தில் ஒரே மாவட்டத்தில் 90 எச்ஐவி பாதிப்புகள் உறுதி!

கிழக்கு பர்தமான், பிப்.12: மேற்கு வங்க மாநிலத்தின் கிழக்கு பர்தமான் மாவட்டத்தில் சுமார் 90 பேருக்கு எச்ஐவி பாதிப்பு ஏற்பட்டிருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

கிழக்கு பர்மான் மாவட்டத்தின் பல்வேறு இடங்களில் வசித்து வரும் சுமார் 90 பேருக்கு எச்ஐவி பாதிப்புகள் ஏற்பட்டு அங்கு பெரும் சுகாதார அச்சுறுத்தல் உருவாகியுள்ளதாக, அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பிரபல மருத்துவர்கள், பல்கலைக்கழக பேராசிரியர்கள், ஆசிரியர்கள் மற்றும் மூத்த கார்பரேட் அதிகாரிகள் ஆகியோர் எச்ஐவியால் பாதிக்கப்பட்டுள்ளது உறுதியாகியுள்ளது.

இதையடுத்து, அவர்கள் பணியாற்றும் இடங்கள் மற்றும் அவர்களது குடும்பங்களுக்குத் தகவல் தெரிவிக்கப்பட்டு தீவிர கண்காணிப்புகள் மேற்கொள்ளப்படுவதாகக் கூறப்பட்டுள்ளது.

கடந்த 3 மாதங்களுக்கு முன்பு கிழக்கு பர்தமான் மாவட்டத்தில் 50 எச்ஐவி பாதிப்புகள் கண்டறியப்பட்ட நிலையில், தற்போது 90 ஆக அதிகரித்துள்ளது.

மேலும், பாதுகாப்பற்ற முறையில் உறவு கொண்ட தன்பாலினச் சேர்கையாளர்களிடம் இந்தப் பாதிப்புகள் அதிகம் பரவியுள்ளதாகக் கூறப்படுகிறது.

இந்த நிலையில், எச்ஐவி நோயால் பாதிக்கப்பட்டவர்களுக்குத் தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்பட்டு வருகின்றது. மேலும், இந்த நோய் பரவிய வழிகள் குறித்து அதிகாரிகள் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

இதன் மூலம், பாதிக்கப்பட்டவர்களில் சிலர் சமூக ஊடகங்களின் வழியாக இணைந்தது கண்டறியப்பட்டுள்ளது.

இதனால், எச்ஐவி பாதிப்புகள் குறித்து கிழக்கு பர்தமான் மாவட்டம் முழுவதும் விழிப்புணர்வு ஏற்படுத்தும் நடவடிக்கைகளில் மாவட்ட நிர்வாகம் ஈடுபட்டு வருவதாக, தலைமை சுகாதார மருத்துவ அதிகாரி ஜெயராம் ஹெம்பிரோம் தெரிவித்துள்ளார்.

# உத்தவ் தாக்கரே கட்சி ஆதரவுடன் மேயர் பதவியை பிடித்த பாஜக: குதிரை பேரம் என காங்கிரஸ் குற்றச்சாட்டு



மகாராஷ்டிரா, பிப்.12: மகாராஷ்டிரா மாநிலத்தில் மாநகராட்சி தேர்தல் நடைபெற்றது. கவுன்சிலர்கள் தேர்ந்தெடுக்கப்பட்ட நிலையில் மேயர் தேர்தல் நடைபெற்று வருகிறது.

சந்த்ரபூர் மாநகராட்சி மேயர் தேர்தலில் பாஜக-வுக்கு ஆதரவாக உத்தவ் தாக்கரே தலைமையிலான சிவ சேனா கட்சி கவுன்சிலர்கள் வாக்களித்ததால், பாஜக மேயர் வேட்பாளர் வெற்றி பெற்றார். உத்தவ் தாக்கரே கட்சி கவுன்சிலர்கள் மாற்றி வாக்களித்ததால் குதிரை பேரம் நடைபெற்றதாக காங்கிரஸ் கட்சி குற்றம்சாட்டியுள்ளது.

சந்த்ரபூர் மேயர் தேர்தலில் பாஜக 32 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றது. காங்கிரஸ் 31 இடங்களில் வாக்குகள் பெற்று தோல்வியை சந்தித்தது. சிவ சேனா (UBT) 6 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. இது காங்கிரஸ் கூட்டணியில் இடம் பிடித்திருந்தது. ஆனால் தேர்தலில் சிவ சேனா (UBT) கவுன்சிலர்கள் பாஜகவுக்கு வாக்களித்துள்ளனர்.

63 இடங்களை கொண்ட தேர்தலில் காங்கிரஸ் கட்சி 27 இடங்களில் வெற்றி பெற்றிருந்தது. பாஜக 23 இடங்களை பிடித்திருந்தது. சிவ சேனா (UBT) 6 இடங்களையும், பாரதிய ஷேட்கரி கம்கார் பாக்ஷ (ஜனவிகாஸ் சேனா) 3 இடங்களையும், விபிஏ 2 இடங்களையும், ஏஐஎம்ஐஎம், பிஎஸ்பி, சிவ சேனா ஆகியவை தலா ஒரு இடங்களையும் பெற்றிருந்தது. சுயேட்சை வேட்பாளர்கள் இரண்டு இடத்தில் வெற்றி பெற்றிருந்தன.

விபிஏ கவுன்சிலர்கள் தேர்தலை புறக்கணித்துள்ளனர். விபிஏ கவுன்சிலர் இருவர் காங்கிரஸ்க்கு வாக்களித்திருந்தால் காங்கிரஸ் வேட்பாளர் வெற்றி பெற்றிருப்பார். காங்கிரஸ் கட்சியுடன் விபிஏ கூட்டணி வைத்திருந்தது குறிப்பிடத்தக்கது. இதனால் குதிரை பேரம் நடைபெற்றது என காங்கிரஸ் குற்றம்சாட்டியுள்ளது.

# ரூ. 3.25 லட்சம் கோடியில் 114 ரஃபேல் விமானங்கள்... மத்திய அரசு விரைவில் ஒப்புதல்?

புதுடெல்லி, பிப்.12: பிரான்ஸ் அதிபர் இமானுவேல் மேக்ரான் விரைவில் டெல்லி வர இருக்கிறார். இந்த நிலையில், இந்திய விமானப்படையின் பல்நோக்கு போர் விமானத் திட்டத்திற்காக 114 பிரெஞ்சு தயாரிப்பு ரஃபேல் போர் விமானங்களை வாங்குவதற்கான ரூ.3.25 லட்சம் கோடி ஒப்பந்தத்திற்கு பாதுகாப்பு அமைச்சகம் இந்த வாரம் ஒப்புதல் அளிக்க வாய்ப்புள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.

ஒப்புதல் அளிக்கப்பட்டால், இது இந்தியாவின் இதுவரை இல்லாத மிகப்பெரிய ஆயுத ஒப்பந்தமாக அமையும். இதில் சுமார் 100 விமானங்களை இந்தியாவில் தயாரிப்பதற்கான ஏற்பாடுகள் உள்ளன.

இது உயர்தர போர் விமான தொழில்நுட்பத்தை இடமாற்றம் செய்வதையும், 'மேக் இன் இந்தியா' திட்டத்தை வலுப்படுத்துவதையும் நோக்கமாக கொண்டுள்ளது. இந்த ஒப்பந்தம் உறுதிப்படுத்தப்பட்டால், இது இந்தியாவை பிரான்ஸ் அல்லாத நாடுகளில் ரஃபேலின் மிகப்பெரிய இயக்குநர்களில் ஒன்றாக உறுதிப்படுத்தும்.

இந்த இரட்டை என்ஜின், பல்நோக்கு போர் விமானம் உலகின் தலைசிறந்த விமானங்களில் ஒன்றாக கருதப்படுகிறது. இது வான்வெளி ஆதிக்கம் மற்றும் துல்லியமான தாக்குதல் பணிகளை நிறைவேற்றுவதற்கு பெயர்பெற்றது. இந்தியா ஏற்கனவே 36 ரஃபேல்களை வைத்துள்ளது. இந்திய விமானப்படை கடந்த 2024 டிசம்பரில் கடைசி 'சி' வகை விமானத்தை பெற்றது. மேலும் ரூ.63,000 கோடி மதிப்புள்ள 26 கடற்படை வகைகளான 'எம்' விமானங்களை ஆர்டர் செய்துள்ளது.

அந்த ஒப்பந்தத்தில் நான்கு இரட்டை இருக்கை பயிற்சி விமானங்கள் வாங்குதல், கடற்படை பராமரிப்பு, லாஜிஸ்டிக்ஸ் ஆதரவு மற்றும் பணியாளர்கள் பயிற்சி ஆகியவை உள்ளடங்கிய MRO (பராமரிப்பு, பழுதுபார்த்தல், மேம்படுத்தல்) ஒப்பந்தமும் அடங்கும். 'எம்' வகை ரஃபேல்கள் ஐ.என்.எஸ். விக்ராந்த் மற்றும் ஐ.என்.எஸ். விக்ரமாதித்யா போன்ற விமானம் தாங்கி கப்பல்களில் பயன்படுத்தப்படும்.

இந்திய விமான படையினர் இந்த விமானங்களை ஏற்கனவே போரில் பபயன்படுத்தியுள்ளன. கடந்த ஆண்டு மே மாதம் பஹல்கம் பயங்கரவாத தாக்குதலுக்கு இந்தியாவின் இராணுவ பதிலடியான "ஆபரேஷன் சிந்தூர்" மற்றும் லடாக்கில் பங்கேற்றன. ஆபரேஷன் சிந்தூரின் போது பயன்படுத்தப்பட்ட ரஃபேல்கள், ஸ்கால்ப் என்ற வான்-வழி குரூயிஸ் ஏவுகணையை ஏவியதாக நம்பப்படுகிறது. இது 250 கிமீ தொலைவில் உள்ள கடின இலக்குகளை துல்லியமாக தாக்கக்கூடியது, இது ஈராக் போர் மற்றும் லிபியாவில் உள்ளிட்ட பல்வேறு மோதல்களில் பயன்படுத்தப்பட்டுள்ளது.

இதற்கிடையே, கடந்த ஆண்டு ஜூன் மாதம் பிரான்ஸ் மற்றும் இந்தியா, உற்பத்தியாளர்களான டசால்ட் ஏவியேஷன் மற்றும் டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் லிமிடெட் இடையே நான்கு முக்கிய உற்பத்தி இடமாற்ற ஒப்பந்தங்களை அறிவித்தன. இது இந்திய இராணுவத்திற்கு ரஃபேல்களின் பாக்கியை விரைவுபடுத்தும். டாடா அட்வான்ஸ்டு சிஸ்டம்ஸ் ஐதராபாத்தில் பிரெஞ்சு போர் விமானத்தின் முக்கிய கட்டமைப்பு பிரிவுகளை தயாரிப்பதற்கான அதிநவீன உற்பத்தி வசதியை அமைக்கும்.

இதில் பின்புற உடற்பகுதியின் பக்கவாட்டு ஷெல்கள், முழு பின்புற பிரிவு, மைய உடற்பகுதி மற்றும் முன்புற பிரிவு ஆகியவை அடங்கும். முதல் உடற்பகுதி பிரிவுகள் 2028இல் உற்பத்தி வரிசையில் இருந்து வெளியேறும். ஒரு மாதத்திற்கு இரண்டு முழு உடற்பகுதிகளை வழங்குவதே இலக்கு, ரஃபேல் போர் விமானத்தின் இறுதி அசெம்பிளி பிரான்ஸின் போர்டோ அருகிலுள்ள மெரிக்னாக்கில் உள்ள டசால்ட் உற்பத்தி ஆலையில் நடைபெறும்.




## ‘தங்க நகை விற்கும் விலையில்...’ – குற்றத் தடுப்புக்காக பெண் ஆய்வாளர் பகிர்ந்த ஆடியோ வைரல்

**மதுரை, பிப்.12:** மதுரையில் நகைப் பறிப்பு, குற்றங்களை தடுக்க, பெண் ஆய்வாளர் வாட்ஸ்ஆப்-பில் ஆடியோ ஒன்றை வெளியிட்டு அறிவுறுத்தினார்.

சுப்பிரமணியபுரம் காவல் நிலையத்தில் குற்றப்பிரிவு பெண் ஆய்வாளர் கிரேசி சோபியா சமீபத்தில் பொறுப்பேற்றார். காவல் நிலைய எல்லைக்கு உட்பட்ட வார்டுகளிலுள்ள பெண்கள், பொதுமக்கள் இணைத்து வாட்ஸ்ஆப் குரூப் ஒன்றை ஏற்படுத்தி, அதில் வெளியிட்ட ஆடியோ ஒன்றில், ‘ஒரு பவுன் ரூ. 1 லட்சத்தை தாண்டியிருக்கிறது.

பாதுகாப்பின்றி நகை அணிந்து வந்தால் டூவீலரில் வந்து பறித்துக்கொள்வர். அதிகாலை 5.30 மணிக்கும், இரவு 8.30 மணிக்கும் இரு இடத்தில் நகைப் பறிப்பு சம்பவம் நடந்துள்ளது. நகை விற்கும் விலைக்கு பாதுகாப்பாக வையுங்கள். முடிந்தளவு பெண்கள் தங்க நகைகளை அணிவதை தவிர்க்கலாம். இதற்கு பதில் கவரிங், பாசிகளை போடுங்கள்.

வெளியூர் சென்றால் வீட்டிலுள்ள பணம் நகைகளை வங்கி லாக்கரில் வையுங்கள். காவல் துறைக்கு தகவல் தெரிவியுங்கள். வர்த்தகர்கள் கடை கல்லா பெட்டியில் பணம் வைக்கக் கூடாது. நம்பர் பிளேட் இன்றி டூவீலர்களில் வலம் வரும் கொள்ளையர்கள், குறிப்பாக வாக்கிங், வாசலில் கோலமிடும், கடைக்கு செல்லும் பெண்களை குறி வைத்து நகை பறிக்கின்றனர்.

நகைப் பறிப்பு நடந்துவிட்டால் கண்டுபிடிப்பது கடினம். மக்கள் விழிப்புடன் இருக்க வேண்டும். வீடு, வர்த்தக நிறுவனங்களில் பணியிலுள்ள காவலாளிகள் விசில் வாங்கி கொடுத்து, குறிப்பிட்ட நேரத்திற்கு ஒருமுறை விசில் ஊத அறிவுறுத்தாலும், சில இடங்களிலுள்ள சிசிடிவி கேமராக்கள் செயல்படாததால் குற்றச் செயல்களை கண்டறிவதில் சிரமம் உள்ளது.

மரங்கள், போஸ்டரால் கேமராக்கள் மறைக்கப்படுகிறது. எவ்வித தகவலாக இருந்தாலும் போலீஸுக்கு தகவல் தெரிவியுங்கள். காவல் துறைக்கு ஒத்துழைப்பு கொடுங்கள்’ என்று குறிப்பிட்டு இருந்தார். குற்றச் செயல்களை தடுக்க, மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்த ஆய்வாளர் கிரேசி சோபியா வெளியிட்ட இந்த ஆடியோ தற்போது சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது.

## மதுரை விமான நிலையத்தில் ரூ.9.50 கோடி மதிப்பிலான ஹைட்ரோபோனிக் கஞ்சா பறிமுதல்

**மதுரை, பிப்.12:** வெளிநாட்டிலிருந்து கடத்தி வரப்பட்ட ரூ.9.50 கோடி மதிப்புள்ள ஹைட்ரோபோனிக் கஞ்சா மதுரை விமான நிலையத்தில் பறிமுதல் செய்யப்பட்டது. மதுரை வழியாக கேரளாவுக்கு காரில் கடத்த முயன்றபோது இந்த போதைப்பொருள் சிக்கியது.

கொழும்பு வழியாக தாய்லாந்தில் இருந்து மதுரைக்கு பல கோடிக்கணக்கான மதிப்புள்ள விலை உயர்ந்த கஞ்சா கடத்தி வருவதாக மதுரை விமான நிலைய வான் நுண்ணறிவு சுங்க இலாகா நுண்ணறிவு துறையினருக்கு ரகசிய தகவல் கிடைந்தது.

இந்நிலையில், தாய்லாந்து தலைநகர் பாங்காங்கில் இருந்து கொழும்பு வழியாக மதுரை விமான நிலையம் வந்தடைந்த விமானத்தில் பயணித்த ஆண் பயணிகளின் உடைமைகளை சுங்கத்துறையினர் தீவிர பரிசோதனை செய்தனர். அப்போது, கேரள மாநிலம் கொடுவாலி பகுதியைச் சேர்ந்த பயணி ஒருவரின் பேக்கில் சாக்லேட் பாக்கெட்டுகளுக்கு நடுவில் சாக்லேட் வடிவில் மறைத்து வைக்கப்பட்டிருந்த பொருட்களை ஆய்வு செய்தனர். அதில், விலை உயர்ந்த சுமார் 9.5 கிலோ ஹைட்ரோபோனிக் என்ற வகை கஞ்சா இருப்பது தெரியவந்தது.

விசாரணையில், பாங்காங்கில் இருந்து மதுரைக்கு கடத்தி வந்திருப்பது தெரிந்து அவற்றை பறிமுதல் செய்தனர். இது தொடர்பாக சம்பந்தப்பட்ட பயணியிடம் சுங்கத் துறையினர் தொடர்ந்து விசாரிக்கின்றனர்.

மதுரை விமான நிலையத்தில் ரூ.9.50 கோடி மதிப்பிலான கடத்தல் ஹைட்ரோபோனிக் கஞ்சா பறிமுதல் செய்தது இதுவே முதல் முறை. தரம் உயர்ந்த வகையாக கருதும் இந்த கஞ்சாவை மருந்து தயாரிக்கவும், போதைக்காகவும் பயன்படுத்தலாம். தாய்லாந்தில் இருந்து மதுரை வழியாக காரில் கேரளாவுக்கு கடத்த முயன்ற நிலையில் பறிமுதல் செய்யப்பட்டது என சுங்கத் துறை அதிகாரிகள் தெரிவிக்கின்றனர்.

## மடப்புரம் அஜித்குமார் மீது நகை திருட்டு புகார் அளித்த பெண் மார்ச் 4-ல் நீதிமன்றத்தில் ஆஜராக உத்தரவு

**மதுரை, பிப்.12:** மடப்புரம் கோயில் காவலாளி அஜித்குமார் மீது நகை திருட்டு புகார் அளித்த பெண் மார்ச் 4-ம் தேதி ஆஜராகுமாறு மதுரை மாவட்ட நீதிமன்றம் நோட்டீஸ் அனுப்பி உள்ளது.

மடப்புரம் காளியம்மன் கோயில் காவலாளி அஜித்குமார், நகை திருட்டு வழக்கு விசாரணைக்காக தனிப்படைக் காவலர்களால் அழைத்துச் செல்லப்பட்டார். அப்போது காவலர்கள் தாக்கியதில் அஜித்குமார் உயிரிழந்தார். இந்த வழக்கில் தனிப்படைக் காவலர்கள் 6 பேர் கைது செய்யப்பட்டனர். மேலும், டிஎஸ்பி, காவல் ஆய்வாளர் உட்பட 4 பேரை போலீஸார் தேடி வருகின்றனர்.

இந்த வழக்கில் தனிப்படைக் காவலர்கள் ஜாமீன் கோரி தாக்கல் செய்த மனு, கடந்த வாரம் உயர் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தபோது, அஜித்குமார் மீது நிகிதா என்பவர் அளித்த நகை திருட்டு புகாரில் உண்மை இல்லை என்று விசாரணையில் தெரிய வந்துள்ளதாகவும், இது தொடர்பாக விரைவில் நீதிமன்றத்தில் அறிக்கை தாக்கல் செய்யப்படும் எனவும் சிபிஐ தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

இதையடுத்து நீதிபதி, “செய்யாத குற்றத்துக்காக ஒருவரை போலீஸார் அடித்தே கொலை செய்துள்ளனர். போலீஸாருக்கு தக்க பாடம் கற்பிக்க வேண்டும். விசாரணை முடியும் வரை காவலர் சிறையிலேயே இருக்கட்டும்” என்று கூறி, “பொய் புகார் அளித்த பெண் மீது என்ன நடவடிக்கை எடுக்கப்பட்டது?” என சிபிஐயிடம் கேள்வி எழுப்பியிருந்தார்.

இந்நிலையில், அஜித்குமார் காவல் மரண வழக்கை விசாரித்துவரும் மதுரை மாவட்ட நீதிமன்றத்தில், நகை திருட்டு புகார் அளித்த நிகிதாவை அழைத்து விசாரிக்க அனுமதி கோரி, சிபிஐ தரப்பில் மனு தாக்கல் செய்யப்பட்டது. இந்த மனுவை மதுரை மாவட்ட தலைமை குற்றவியல் நீதிமன்ற நீதிபதி செல்வபாண்டி விசாரித்து, மார்ச் 4-ம் தேதி நிகிதா நீதிமன்றத்தில் ஆஜராக நோட்டீஸ் அனுப்ப உத்தரவிட்டார்.

# பிப்.22 முதல் கூட்டணி கட்சிகளுடன் தொகுதி பங்கீட்டு பேச்சுவார்த்தை: திமுக அறிவிப்பு




**சென்னை, பிப்.12:** வரும் 22-ம் தேதி முதல் கூட்டணி கட்சிகளுடன் தொகுதிப் பங்கீட்டு பேச்சுவார்த்தை தொடங்கும் என திராவிட முன்னேற்ற கழகம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக திமுக வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியுள்ளதாவது:

நடைபெறவுள்ள 2026 சட்டப்பேரவைத்தேர்தலுக்கான களப்பணிகளில் கழக உடன்பிறப்புகள் சுற்றிச் சுழன்று பணியாற்றி வருகின்றனர். வாக்காளர் பட்டியல் தீவிர சிறப்புத் திருத்த நடவடிக்கை நிறைவடைந்திருக்கிறது. இதற்காக, மாவட்டச் செயலாளர்கள், நாடாளுமன்ற-சட்டமன்ற உறுப்பினர்கள், தொகுதிப் பார்வையாளர்கள், பகுதி-நகர-ஒன்றியக் கழகச் செயலாளர்கள்-நிர்வாகிகள், சார்பு அணியினர், வாக்குச்சாவடி முகவர்கள்- குழுவினர் என லட்சக்கணக்கானோர், கடந்த சில வாரங்களாகத் தீவிர பணியாற்றி வந்துள்ளனர்.

‘ஓரணியில் தமிழ்நாடு’ உறுப்பினர் சேர்க்கை, ‘என் வாக்குச்சாவடி வெற்றி வாக்குச்சாவடி’, மேற்கு மற்றும் வடக்கு மண்டல இளைஞரணி நிர்வாகிகள் சந்திப்பு மாநாடு, டெல்டா மற்றும் தெற்கு மண்டல மகளிரணி மாநாடு என வெற்றிக்கனி பறிப்பதற்கான அடிப்படைப் பணிகளை அர்ப்பணிப்போடு செயல்பட்டு வருகிறார்கள்.

இனி வரும் நாட்களில் வீடு வீடாக, வெல்லும்தமிழ்பெண்கள் பரப்புரையை, மகளிர் படை மேற்கொள்ளவிருக்கிறது. மேலும், வாக்குச்சாவடி குழுவினருக்கு நான்கு பயிற்சி மாநாடுகள், திருச்சியில் ‘ஸ்டாலின் தொடரட்டும் தமிழ்நாடு வெல்லட்டும்’ மாநாடு என இடைவிடாத களப் பணிகள் ஒரு புறமும், திராவிட மாடல் அரசின் மூலம் அடுக்கடுக்கான நலத்திட்டங்களின் அமலாக்கம் மறுபுறமும் ஒவ்வொரு நாளும் நடந்து வருகின்றன.

தேர்தல் அறிக்கை தயாரிப்பதற்கான குழு அமைக்கப்பட்டு, அக்குழுவினர் தமிழ்நாடு முழுவதும் சுற்றுப்பயணம் செய்து மக்களின் தேவைகளையும் எதிர்பார்ப்புகளையும் அறிந்து வருகின்றனர். இதுவரையிலும் 75,000 கோரிக்கைகளும்பரிந்துரைகளும் பெறப்பட்டுள்ளன.

வரும் 17-ம் தேதி தமிழ்நாடு அரசின் இடைக்கால நிதி நிதிநிலை அறிக்கை தாக்கல் செய்யப்பட்டு, தொடர்ந்து அதன் மீதான விவாதம் நடைபெற இருக்கிறது. கழகத் தலைவர் ஸ்டாலின், அமைக்கவுள்ள திமுக தொகுதி பங்கீட்டுக் குழுவானது, சட்டப்பேரவை அலுவல்கள் நிறைவடைந்தவுடன், பிப்ரவரி 22-ம் தேதி முதல் தோழமை கட்சிகளுடன் தொகுதிப் பேச்சுவார்த்தையில்ஈடுபடும்என தெரிவிக்கப்படுகிறது. இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

# வேலை கிடைக்காத விரக்தியில் இளைஞர் தற்கொலை முயற்சி: விஷத்தை பறித்து அருந்திய தாய் உயிரிழப்பு

**சென்னை, பிப்.12:** வேலை கிடைக்காத விரக்தியில் மகன் விஷம் குடித்து தற்கொலைக்கு முயன்றார். அந்த விஷத்தை பறித்து அருந்திய தாய் உயிரிழந்த நிலையில் மகன் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

உத்தரப்பிரதேசம் மாநிலம் நொய்டா பகுதியைச் சேர்ந்தவர் நீரஜ் ஜெயின் (54). இவருக்கு சோனாலி ஜெயின் (52) என்ற மனைவியும், கிஷிதிஜி ஜெயின் (29) என்ற மகனும் உள்ளனர். நீரஜ் ஜெயின் அண்ணாநகரில் குடும்பத்துடன் வசித்து வருகின்றார்.

மேலும் செம்பியத்தில் டிராக்டர் நிறுவனத்தில் துணைத் தலைவராகவும் உள்ளார். இவரது மகன் கிஷிதிஜி ஜெயின் இங்கிலாந்தில் எம்பிஏ படித்துவிட்டு வேலை தேடி வந்தாக கூறப்படுகிறது. அங்கே வேலை கிடைக்காததால் கடந்த டிசம்பரில் சென்னை திரும்பி இங்கு வேலை தேடியுள்ளார்.

சென்னையிலும் வேலை கிடைக்காததால் விரக்தியடைந்துள்ளார். மேலும் இதுதொடர்பாக தாயாரிடம் கூறி வேதனைப்பட்டுள்ளார். அவருக்கு தாய் ஆறுதல் கூறியுள்ளார். இந்நிலையில் நேற்று முன்தினம் இரவு கிஷிதிஜி விஷம் அருந்தி தற்கொலைக்கு முயன்றுள்ளார்.

இதைக் கண்டு அதிர்ச்சி அடைந்த தாய், அந்த விஷத்தை பறித்து அருந்தியுள்ளார். பின்னர் இருவரும் அங்கேயே மயங்கினர். சிறிது நேரத்துக்குப் பிறகு அங்கு வந்த நீரஜ் ஜெயின் மனைவி மற்றும் மகனை மீட்டு அண்ணா நகரில் உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்துள்ளார்.

அங்கு சிகிச்சை பலனின்றி சோனாலி உயிரிழந்தார். மகனுக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது. இந்த விவகாரம் தொடர்பாக அண்ணா நகர் போலீஸார் விசாரித்து வருகின்றனர்.

# மத்திய அரசுக்கு எதிராக பிப்.12ல் கண்டன ஆர்ப்பாட்டம் - தமிழக மக்களுக்கு சிபிஎம் அழைப்பு



**சென்னை, பிப்.12:** தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்க நடைபெறும் கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைத்துப் பகுதி மக்களும் பெருவாரியாக கலந்து கொண்டு கண்டன குரலெழுப்பிட வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் மாநில செயலாளர் பெ.சண்முகம் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில்: “மத்திய பாஜக அரசின் பட்ஜெட்டில்தமிழ்நாட்டிற்கான கல்வி நிதி ஒதுக்க மறுப்பு, 100 நாள் வேலை திட்டத்திற்கான நிதி, குடிநீர் இணைப்பு நிதி எதையும் விடுவிக்காதது, ரயில்வே உள்ளிட்டு வளர்ச்சித் திட்டங்களுக்கு எந்த நிதியும் ஒதுக்காதது, கிராமப் புற மக்கள் பயன்பெறும் 100 நாள் வேலை திட்டத்தை ஒழித்துக்கட்டி 100 நாள் வேலையே இனி இல்லாமல் செய்து ஏழை, எளிய மக்களின் வயிற்றில் அடித்துள்ளது.

மதுரை, கோவை மெட்ரோ திட்டம் அனுமதி மறுப்பு, உரிய வரி பங்கீடு தராமை என தமிழகத்தையும், தமிழக மக்களையும் புறக்கணித்து அரசியல் காழ்ப்புணர்ச்சியுடன் மத்திய பாஜக அரசு வஞ்சித்து வருகிறது. அமெரிக்காவில் இருந்து விவசாயப் பொருட்கள் எந்த வரியும் இல்லாமல் இறக்குமதி செய்து விற்க அனுமதி அளித்து உள்நாட்டு விவசாயிகள், விவசாய தொழிலாளர்களின் வாழ்வாதாரத்தை முற்றிலும் அழித்துள்ளது. மத்திய பாஜக அரசின் தமிழக விரோதப் போக்கையும், தேச விரோத நடவடிக்கைகளையும் கேட்க திராணியற்ற அதிமுக ரெய்டுகளுக்கு பயந்து தனது சுய நலன்களுக்காக பாஜகவிடம் சரணாகதி அடைந்துள்ளது.

மத்திய பாஜக அரசின் தமிழக விரோதப்போக்கை கண்டித்தும், தமிழகத்திற்கு நிலுவையில் உள்ள நிதிகளை விடுவிக்கவும், ரயில்வே உள்ளிட்ட வளர்ச்சித் திட்டங்களுக்கு நிதி ஒதுக்கிட கோரியும் பிப்.12ம் தேதி (நாளை) தமிழ்நாடு முழுவதும் திமுக தலைமையிலான மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெறுகிறது.

தமிழகத்தின் உரிமைகளை பாதுகாக்க நடைபெறும் இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் அனைத்துப் பகுதி மக்களும் பெருவாரியாக கலந்து கொண்டு கண்டன குரலெழுப்பிட வேண்டும் என மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாநில செயற்குழு வேண்டுகோள் விடுக்கிறது” என்று பெ.சண்முகம் கூறியுள்ளார்.

# பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில் தடத்தில் 3 நாட்களுக்கு பாதுகாப்பு ஆணையர் ஆய்வு



**சென்னை, பிப்.12:** பூந்தமல்லி - வடபழனி மெட்ரோ ரயில் வழித்தடத்தில் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம்.சவுத்ரி இன்று முதல் 3 நாட்களுக்கு ஆய்வு நடத்துகிறார். சென்னையில், 2-ம் கட்டமாக 3 வழித்தடங்களில், 116.1 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில் பணிகள் நடைபெறுகின்றன.

இதில், கலங்கரைவிளக்கம் - பூந்தமல்லி வரை 26.1 கி.மீ. தொலைவு வழித் தடத்தில் பல இடங்களில் பணிகள் நடைபெறுகின்றன. இத்தடத்தில் ஒருபகுதியாக, பூந்தமல்லி - போரூர் வரை ரயில் பாதைகள் அமைக்கப்பட்டு, அனைத்து கட்ட சோதனை பணிகள் முடிக்கப்பட்டன.

பின்னர், போரூர் - வடபழனி இடையே கட்டமைப்புகள், சிக்னல் தொழில்நுட்பம், உயர் மட்ட மின் பாதை பணிகள் நிறைவடைந்துள்ளன. இதையடுத்து, இத்தடத்திலும் வெற்றிகரமாக மெட்ரோ ரயில் இயக்கி சோதனை நடத்தப்பட்டுள்ளன.

தண்டவாள செயல்திறன், சிக்னல் அமைப்பு, ரயில் பெட்டி இணைப்பு திறன் திறன் ஆகிய ஆய்வுகள் முடித்து, இதற்கான பாதுகாப்பு அறிக்கை, ரயில்வே பாதுகாப்பு ஆணையரகத்துக்கு அனுப்பப்பட்டது.

இந்நிலையில், தெற்கு மண்டல ரயில்வே பாதுகாப்பு ஆணையர் ஏ.எம்.சவுத்ரி தலைமையிலான குழுவினர் நேற்று (11-ம் தேதி) முதல் வரும் 13-ம் தேதி வரை, பூந்தமல்லி - வடபழனி வரையில் 16 கி.மீ. தொலைவுக்கு மெட்ரோ ரயில் பாதைகள், மெட்ரோ ரயில் நிலையங்களில் முழுமையாக ஆய்வு நடத்த உள்ளனர்.

இது குறித்து, சென்னை மெட்ரோ ரயில் நிறுவன அதிகாரிகள் கூறியதாவது: பூந்தமல்லி - கலங்கரை விளக்கம் வழித் தடத்தில், பூந்தமல்லி முதல் வடபழனி வரை மெட்ரோ ரயில் பாதைகள், ரயில் நிலையங்களில் ரயில்வே பாதுகாப்பு ஆணையர் மற்றும் அவரது குழுவினர் ஆய்வு நடத்துவர்.

இன்றும், நாளையும் டிராலியில் சென்று ரயில் தண்டவாளத்தை ஆய்வு செய்வர். தொடர்ந்து, பணிகள் முடிக்கப்பட்டு ரயில் நிலையங்களில் ஆய்வு மேற்கொள்வர். ரயில் தண்டவாளம், ரயில் பிரேக் தொழில்நுட்பம், பயணிகள் பாதுகாப்பு உள்ளிட்ட பல்வேறு அம்சங்களில் ஆய்வு நடத்துவர்.

3-வது நாளில் மெட்ரோ ரயில் மணிக்கு 80 கி.மீ. வேகத்தில் இயக்கி சோதனை நடத்துவார். பின்னர், மெட்ரோ ரயில் இயக்குவது குறித்து ஒப்புதல் அளிப்பார் என எதிர்பார்க்கப்படுகிறது. இதையடுத்து, இந்த தடத்தில், இந்த மாதம் இறுதிக்குள் மெட்ரோ ரயில் சேவை தொடங்க திட்டமிடப்பட்டுள்ளது. இவ்வாறு அவர்கள் கூறினர்.

# சென்னை மாநகராட்சி பட்ஜெட் 18-ந்தேதி தாக்கல்- புதிய அறிவிப்புகள் இடம்பெற வாய்ப்பு




**சென்னை, பிப்.12:** சென்னை மாநகராட்சியின் பட்ஜெட் கூட்டம் வருகிற 18-ந்தேதி ரிப்பன் கட்டிட அலுவலகத்தில் நடைபெற உள்ளது. அப்போது, சென்னை மாநகராட்சியின் 2026-27-ம் ஆண்டுக்கான பட்ஜெட் காலை 10 மணிக்கு தாக்கல் செய்யப்பட உள்ளது. 20-ந்தேதி பட்ஜெட்டின் மீதான விவாதம் நடைபெறுகிறது. விவாதத்திற்கு பின்னர் பட்ஜெட் மீது ஒப்புதல் அளிக்கப்படும். பின்னர், தீர்மானங்களாக நிறைவேற்ற வேண்டிய பொருட்கள் எடுத்துக்கொள்ளப்படும்.

கடந்த ஆண்டு சென்னை மாநகராட்சியின் பட்ஜெட் ரூ.8,404 கோடியாக இருந்தது. இதேபோல, 300 பூங்காக்கள் சீரமைப்பு, அரசு பள்ளி மாணவர்களுக்கு ஆங்கில பேச்சாற்றல் பயிற்சி, பெண்களுக்கு திறன் மேம்பாட்டுப் பயிற்சி உள்ளிட்ட 62 புதிய அறிவிப்புகள் வெளியிடப்பட்டது.

சட்டமன்றத் தேர்தல் தேதி விரைவில் அறிவிக்கப்பட இருப்பதால் சென்னை மாநகராட்சி பட்ஜெட்டில் பல முக்கிய அறிவிப்புகள் இடம்பெற வாய்ப்புள்ளதாக கூறப்படுகிறது. புதிய மேம்பாலங்கள், மழைநீர் வடிகால் பணி, பெண்களுக்கான புதிய திட்டங்கள், திடக்கழிவு மேலாண்மை மற்றும் சிறப்பு திட்டங்கள் குறித்த அறிவிப்புகள் இடம் பெற வாய்ப்புள்ளது. கல்வி, சாலை வசதி, போக்குவரத்து, மழை நீர் வடிகால் உள்ளிட்ட பணிகளுக்கு பட்ஜெட்டில் முக்கியத்துவம் அளித்து கூடுதல் நிதி ஒதுக்கப்படும் என கூறப்படுகிறது.

# ‘சென்னை ஒன்’ செயலியில் 50 லட்சம் டிக்கெட் விற்பனை

**சென்னை, பிப்.12:** சென்னை ஒன் செயலியில் 50 லட்சம் டிக்கெட்டுகள் விற்பனை செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. சென்னையில் போக்குவரத்து சேவைகளை ஒருங்கிணைப்பதற்காக, சென்னை ஒருங்கிணைந்த போக்குவரத்து குழுமம் (கும்டா) ஏற்படுத்தப்பட்டது.

இந்த குழுமம் வாயிலாக ‘சென்னை ஒன்’ என்ற செயலி புதிதாக உருவாக்கப்பட்டது. கடந்த செப்.22-ம் தேதி தொடங்கி வைக்கப்பட்ட இந்த செயலி மூலமாக மெட்ரோ ரயில், மின்சார ரயில், மாநகர பேருந்துகளில் பயணிப்பதற்கான டிக்கெட்டுகளை கியூஆர் குறியீடு வழியாக பெறலாம்.

இந்த 3 சேவைகளுக்கும் சேர்த்து அல்லது தனித் தனியாகவும் மக்கள் இந்த செயலியில் டிக்கெட் பெற முடியும். அறிமுகம் செய்யப்பட்டது முதல் பொதுமக்கள் இடையே இந்த செயலி மிகுந்த வரவேற்பை பெற்று வருகிறது.

தொடர்ந்து இந்த செயலியில் பல்வேறு வசதிகள் கொண்டு வரப்பட்டன. மாநகர பேருந்துகளுக்கான மாதாந்திர பாஸ் பெறும் வசதி, ஒரு ரூபாய் கட்டணம் செலுத்தி, மெட்ரோ, மாநகர பஸ், ரயிலில் ஒரு முறை சலுகை பயணம் ஆகியவை கொண்டு வரப்பட்டன.

இந்த செயலி பேருந்துகளில் சில்லரை பிரச்சினை, ரயில், மெட்ரோ நிலையங்களில் டிக்கெட் எடுப்பதற்கு வரிசையில் காத்திருப்பது உள்ளிட்ட சிக்கல்களுக்கு தீர்வு அளிக்கிறது. இது வரை 5 லட்சத்துக்கும் மேற்பட்டோர் இந்த செயலியை பதிவிறக்கம் செய்து பயன்படுத்தி வருகின்றனர்.

இந்நிலையில், சென்னை ஒன் செயலியில் 50 லட்சம் டிக்கெட்டுகள் விற்கப்பட்டுள்ளதாக கும்டா அதிகாரிகள் தெரிவித்தனர். மேலும், செயலி அறிமுகப்படுத்தப்பட்ட போது தினமும் சராசரியாக 20 ஆயிரம் டிக்கெட்டுகள் விற்பனையான நிலையில், தற்போது, 35 ஆயிரம் டிக்கெட்டுகள் வரை விற்பனையாவதாக அதிகாரிகள் தெரிவித்தனர்.

# பழங்குடியினர் சமூக பெயர் மாற்றம் கோரிய மனு தள்ளுபடி



**மதுரை, பிப்.12:** தூத்துக்குடியைச் சேர்ந்த செல்வகுமார் என்பவர் உயர் நீதிமன்ற மதுரை அமர்வில் தாக்கல் செய்த மனுவில் கூறியிருப்பதாவது: தமிழகத்தில் 2019-ல் பிறப்பிக்கப்பட்ட அரசாணையில் சீர்மரபினருக்கான சாதிச் சான்றிதழ் டிஎன்டி என்ற ஒரே பெயரில் வழங்கப்பட வேண்டும் எனக் கூறப்பட்டது.

ஆனால், நடைமுறையில் டிஎன்டி/டிஎன்சி என இரு வகைச் சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன. இதனால் பழங்குடியினர் பிரிவில் வருபவர்கள் மத்திய அரசின் நலத் திட்டங்களைப் பெற முடியாத நிலை உள்ளது.

குற்றப் பரம்பரைச் சட்டம் ரத்து செய்யப்பட்ட பின்னரும், அவர்களை அறிவிப்பு நீக்கப்பட்ட பழங்குடிகள் (டி நோட்டி பைடு டிரைப்ஸ்) என்று அழைப்பது சட்டவிரோதமாகும்.

அவர்களை மரியாதைமிக்க பூர்வீக பழங்குடிகள் (டிக்னிலைடு நேட்டிவ் டிரைப்ஸ்) என்று அழைக்க வேண்டும். எனவே சாதிச் சான்றிதழ் வழங்கும்போது, அறிவிப்பு நீக்கப்பட்ட பழங்குடிகள் என்பதை, மரியாதைமிக்க பூர்வீக பழங்குடிகள் என்று வழங்கவும், அவர்களுக்கு தேசிய அளவில் தனி இட ஒதுக்கீடு வழங்கவும் உத்தரவிட வேண்டும். இவ்வாறு மனுவில் கூறப்பட்டிருந்தது.

அரசிடம் முறையிடலாம்... இந்த மனுவை நீதிபதிகள் ஜி.ஜெயச்சந்திரன், கே.கே.ராமகிருஷ்ணன் அமர்வு விசாரித்து, "இது அரசின் கொள்கை முடிவோடு தொடர்புடையது என்பதால், நீதிமன்றம் எந்த உத்தரவையும் பிறப்பிக்க இயலாது. மனுதாரர் அரசிடம் முறையிட்டு நிவாரணம் பெறலாம். மனு தள்ளுபடி செய்யப்படுகிறது" என்று உத்தரவிட்டது.

# மாதேஸ்வரன் மலைக்கோயில் பாதையில் சிறுவனை தாக்கிய சிறுத்தை: பக்தர்கள் அச்சம்



மாதேஸ்வரன் மலைக் கோயிலுக்கு குழுவினருடன் பாதயாத்திரையாக சென்ற சிறுவனை சிறுத்தை திங்கள்கிழமை தாக்கியது.

தமிழக எல்லையான பாலாற்றில் இருந்து சுமார் 20 கி.மீ. தொலைவில் கா்நாடக மாநிலத்தில் உள்ள மாதேஸ்வரன் கோயிலுக்கு, கா்நாடக மாநில பக்தா்கள் மட்டுமின்றி தமிழகத்தில் இருந்தும் லட்சக்கணக்கான பக்தா்கள் செல்கின்றனா்.

பாதயாத்திரையாகவும், இருசக்கர வாகனங்களிலும், காா்கள் மற்றும் பேருந்துகளிலும் நாள்தோறும் ஆயிரக்கணக்கான பக்தா்கள் இக்கோயிலுக்கு சென்று வருகின்றனா். சில பக்தா்கள் பாதயாத்திரையாக சென்று ஆலயத்தில் தங்கி ஆலயத்தைத்தூய்மைப்படுத்துவது உள்ளிட்ட சேவைகளை செய்துவருகின்றனா்.

கடந்த 10 நாள்களுக்கு முன்பு பாதயாத்திரையாக சென்ற பக்தரை கா்நாடக மாநிலம், சாமராஜ நகா் மாவட்டத்தில் உள்ள தாளபெட்டா என்ற இடத்தில் சிறுத்தை தாக்கிக் கொன்றது. இதைத் தொடா்ந்து, மாதேஸ்வரன் மலைக்கு பாதயாத்திரையாக செல்லவும், இருசக்கர வாகனங்களில் செல்லவும் தடை விதிக்கப்பட்டது.

அதன்பிறகு, தமிழக பக்தா்கள் காலை 6 மணிமுதல் மாலை 4 மணிவரை இருசக்கர வாகனங்களில் சென்றுவர அனுமதிக்கப்பட்டனா்.

இந்நிலையில், தமிழக எல்லையில் உள்ள பாலாறு வனப் பகுதியில் சிறுத்தைகள் நடமாட்டம் இருப்பதை சென்னம்பட்டி வனத் துறையினா் உறுதிசெய்தனா். இதனால் பகலிலேயே பாலாறு பகுதியில் பக்தா்கள், வாகனங்கள் நடமாட்டமின்றி வெறிச்சோடிக் காணப்பட்டது.

இந்நிலையில், கா்நாடக மாநிலம், ஹனூா் வட்டம், சென்னப்பட்டணா கிராமத்தில் இருந்து ஒரு குழுவினா் பாதயாத்திரையாக மாதேஸ்வரன் மலைக் கோயிலுக்கு திங்கள்கிழமை சென்றனா். இந்தக் குழுவில் பெண்களும், சிறுவா்களும் இருந்தனா்.

காலை 11 மணி அளவில் தாளபெட்டா அருகே பாதயாத்திரை குழுவினா் சென்றபோது, புதா் மறைவில் இருந்த சிறுத்தை அந்தக் குழுவில் இருந்த சிரேயன் (8) என்ற சிறுவனை தாக்கியது. இதில், சிறுவனின் காதில் சிறுத்தையின் நகக்கீறல் பதிந்தது. உடன், வந்தவா்கள் சப்தமிடவே சிறுத்தை சிறுவனை விட்டுவிட்டு வனப்பகுதியில் ஓடி மறைந்தது.

இதனால் அதிா்ச்சி அடைந்த கா்நாடக வனத் துறையினா், மாதேஸ்வரன் மலைக் கோயிலுக்கு செல்ல கடுமையான கட்டுப்பாடுகளை விதித்துள்ளனா். அதைத் தொடா்ந்து, மாதேஸ்வரன் மலைக்கு செல்லும் பாதைகளில் ஆங்காங்கே கையில் வாக்கி - டாக்கியுடன் வனக் காவலா்கள் நிறுத்தப்பட்டுள்ளனா்.

# விஷம் கலந்த கேக் சாப்பிட்டு தற்கொலைக்கு முயன்ற குடும்பம்- இருவர் உயிரிழப்பு


**சென்னை, பிப்.12:** சென்னை பெரம்பூரில் விஷம் கலந்த கேக்கை சாப்பிட்டு 2 பேர் உயிரிழந்தனர். 2 பேர் கவலைக்கிடமான நிலையில் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

சகாயம் செபஸ்டின் என்பவரின் மனைவி பியூலா புற்றுநோயால் பாதிப்பட்டார். இதன் காரணமாக மன வேதனையில் இருந்த சகாயம் செபஸ்டின் கேக்கில் விஷம் கலந்து குடும்பத்தினருக்கு கொடுத்தார்.

கேக்கை சாப்பிட்டு 2 பேர் உயிரிழந்தனர். தாய் மற்றும் மகள் உயிருக்கு ஆபத்தான நிலையில் அரசு மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

உயிரிழந்த இருவரின் உடலை கைப்பற்றி பெரம்பூர் செம்பியம் காவல்துறையினர் தீவிர விசாரணை நடத்தி வருகின்றனர்.

# இப்படியும் உதவலாம்: ஸ்கூட்டரில் எழுதி வைத்த துண்டுச்சீட்டால் சிக்கிய பாம்பு




**திருச்சி, பிப்.12:** திருச்சி தென்னூர் பகுதியை சேர்ந்தவர் கணபதி. வக்கீலான இவர் தினமும் திருச்சி கோர்ட்டுக்கு சென்று அன்றாட அலுவல் பணிகளை மேற்கொள்வது வழக்கம். நேற்று காலை 9.30 மணிக்கு கணபதி தனது ஸ்கூட்டரில் கோர்ட்டுக்கு சென்றார். ஸ்கூட்டரை ஜூடிசியல் மாஜிஸ்திரேட்டு கோர்ட்டு கட்டிடம் முன்பு நிறுத்திவிட்டு உள்ளே சென்றார். பின்னர் காலை 11.30 மணி அளவில் அவரது ஜூனியர் வக்கீல் அலறி அடித்துக்கொண்டு கணபதியை பார்க்க ஓடோடி வந்தார்.

அவர் கணபதியிடம், உங்களது ஸ்கூட்டர் இருக்கை மீது ஒரு துண்டுச்சீட்டு உள்ளது. அந்த சீட்டில் 'இந்த வண்டியின் உள்ளே பாம்பு உள்ளது' என்று எழுதி வைக்கப்பட்டுள்ளது.

அதோடு வாகனத்தின் பதிவு எண்ணும், தேதி மற்றும் நேரமும் குறிப்பிடப்பட்டு இருக்கிறது. அத்துடன் அந்த துண்டுச்சீட்டு பறக்காமல் இருக்க அதன் மீது ஒரு சிறிய கல்லையும் யாரோ ஒருவர் வைத்துவிட்டு சென்றுள்ளார் என்று கூறினார்.

இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த கணபதி பதறி அடித்துக்கொண்டு கோர்ட்டில் இருந்து வெளியே வந்தார். ஸ்கூட்டர் இருக்கை மீது இருந்த துண்டுச்சீட்டை பார்த்துவிட்டு தீயணைப்புத்துறையினருக்கு தகவல் தெரிவித்தார். அதன்பேரில் தீயணைப்பு வீரர்கள் கோர்ட்டுக்கு விரைந்து வந்து, ஸ்கூட்டருக்குள் சோதனையிட்டனர். ஆனால் அங்கு பாம்பு இல்லை.

இருப்பினும் வக்கீலின் வேண்டுகோளை ஏற்று. ஸ்கூட்டரின் ஒவ்வொரு பாகங்களையும் கழற்றி பார்த்தனர். அப்போது இண்டிகேட்டருக்கு பின்னால் சிறிய சாரைப்பாம்பு மறைந்து இருந்ததை கண்டுபிடித்தனர். உடனே தீயணைப்பு வீரர்கள் அந்த பாம்பை லாவகமாக பிடித்து பைக்குள் போட்டு, அங்கிருந்து கொண்டு சென்றனர்.

கோர்ட்டுக்கு வந்த யாரோ ஒருவர் ஸ்கூட்டரில் பாம்பு புகுந்ததை கண்டுள்ளார். அந்த சமயம் அக்கம்பக்கத்தில் யாரும் இல்லாததால், அந்த ஸ்கூட்டரை ஓட்டுபவர் பாதிக்கப்பட்டு விடக்கூடாது என்ற மனிதநேயத்துடன் துண்டுச்சீட்டில் குறிப்பு எழுதி வைத்துவிட்டு சென்றுள்ளார். அந்த துண்டுச்சீட்டின் மூலம் வாகனத்துக்குள் புகுந்த பாம்பு சிக்கியது. இந்த சம்பவம் காரணமாக திருச்சி கோர்ட்டு வளாகத்தில் ½ மணி நேரம் பரபரப்பு ஏற்பட்டது.

# ஆஸ்திரியாவுக்கு கடத்தப்பட்ட தொன்மையான கோயில் கல்தூண் மீட்பு நடவடிக்கை தீவிரம்!



தமிழக கோயிலிலிருந்து திருடப்பட்டு ஆஸ்திரியாவுக்கு கடத்தப்பட்ட தொன்மையான கல் தூணை மீட்கும் நடவடிக்கையில் சிலைக் கடத்தல் தடுப்பு பிரிவு தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

ஆஸ்திரியா நாட்டின் உள்துறை அமைச்சகத்தின் கீழ் செயல்படும் கலை சொத்துகள் பிரிவு, அண்மையில் ஒரு பழைமையான கல் தூணை பறிமுதல் செய்தது. சுமாா் அரை டன் எடை கொண்ட அந்தக் கல் தூணில் விஷ்ணு, கருடன், முனிவா், அலங்கரிக்கப்பட்ட அன்னம் ஆகியவற்றின் சிற்பங்கள் உள்ளன.

தகவலறிந்த சிலை திருட்டு தடுப்புப் பிரிவு கூடுதல் காவல் கண்காணிப்பாளா் ஜி.பாலமுருகன் இதுகுறித்து நடத்திய விசாரணையில், அந்தக் கல் தூண் தமிழகத்தில் உள்ள ஒரு தொன்மையான கோயிலில் இருந்து திருடப்பட்டு, ஆஸ்திரியாவுக்கு கடத்தப்பட்டிருப்பது தெரியவந்தது. ஆனால், எந்தக் கோயிலில் இருந்து திருடப்பட்டது என்பதை சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவினரால் உடனடியாகக் கண்டறிய முடியவில்லை. மேலும், கல் தூணின் புகைப்படங்களைப் பெற்று சிலை கடத்தல் தடுப்பு பிரிவின் காப்பாளா் பி.எஸ். ஸ்ரீராமனிடம் கருத்துரைப் பெறப்பட்டது. அதில் அவா், இந்தக் கல்தூண் கிரானைட் வகை கல்லால் ஆனது, வட தமிழகத்தில் இருந்தோ அல்லது ஆந்திரம், காநாடக மாநிலங்களில் கோயில்களில் இருந்து திருடப்பட்டிருக்கலாம் எனத் தெரிவித்தாா்.

இந்தக் கல் தூண், தமிழகத்தில் ஒரு கோயில் மண்டபத்தில் திருடப்பட்டு, கடத்தப்பட்டுள்ளது என்று ஆஸ்திரியா நாட்டு அரசுக்கு சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு தெரிவித்துள்ளது. இதையடுத்து சிலைக் கடத்தல் தடுப்புப் பிரிவு, வழக்குப் பதிவு செய்து, விசாரணையைத் தொடங்கியுள்ளது. மேலும், தொன்மையான கல்தூணை ஆஸ்திரியா நாட்டில் இருந்து இந்தியாவுக்கு கொண்டு வரும் நடவடிக்கையில் தீவிரமாக ஈடுபட்டுள்ளது.

# தஞ்சாவூர் மாநகராட்சியில் காலை உணவை திருப்பி அனுப்பிய தூய்மைப் பணியாளர்கள்



**தஞ்சாவூர், பிப்.12:** தஞ்சை மாநகராட்சியில் பணியாற்றும் ஒப்பந்த தூய்மைப் பணியாளர்கள் 16 பேர் நேற்று காலை தங்களுக்கு வழங்கப்பட்ட உணவு தரமாக இல்லை என்று கூறி, ஒப்பந்ததாரரிடமே திருப்பி வழங்கிவிட்டனர்.

தஞ்சாவூர் மாநகராட்சியில் பணியாற்றும் தூய்மைப் பணியாளர்கள், ஓட்டுநர்கள் என மொத்தம் 757 பேருக்கு காலை உணவு வழங்கும் திட்டம் நேற்று முன்தினம் தொடங்கப்பட்டது.

தொடர்ந்து, 2-வது நாளான நேற்று காலை 14-வது கோட்டத்தில் உணவு வழங்கப்பட்டபோது, உணவு தரமாக இல்லை என்றும், ஒவ்வாமை ஏற்படுவதாகவும் கூறி அந்த உணவை தூய்மைப் பணியாளர்கள் உண்ண மறுத்து, அவற்றை ஒப்பந்ததாரரிடமே வழங்கிவிட்டனர். மேலும், இதற்கான காரணத்தை விளக்கி, மாநகராட்சியில் கடிதத்தையும் வழங்கினர். இதுகுறித்து தமிழ்நாடு உள்ளாட்சித் துறை பணியாளர் சங்க மாவட்ட துணைத் தலைவர் ஆனந்தராஜ் கூறியதாவது: தூய்மைப் பணியாளர்களுக்கு காலை உணவு வழங்கும் திட்டத்தின் கீழ் தஞ்சாவூர் மாநகராட்சியின் 5, 7, 8 ஆகிய கோட்டங்களில் ஒரு மாதம் பரீட்சார்த்த முறையில் தினமும் ரவா உப்புமா, ரவா கிச்சடி, சேமியா கிச்சடி, வெண் பொங்கல், இட்லி ஆகியவற்றில் ஏதாவது ஒன்று வழங்கப்பட்டது. ஆனால், அந்த உணவு தரமாக இல்லாததால் பல நாட்கள் நாங்கள் சாப்பிடவில்லை. மேலும் இதுகுறித்து மாநகராட்சி அலுவலர்களிடம் தெரிவித்து, தரமாக உணவு வழங்க வேண்டும் என கேட்டுக் கொண்டோம்.

இத்திட்டம் தொடங்கப்பட்ட பின் தரமான உணவு வழங்கப்படும் என்று அலுவலர்கள் உறுதி அளித்தனர். ஆனால், தமிழகம் முழுவதும் நேற்று (பிப். 9 இந்த திட்டம் தொடங்கப்பட்ட பிறகு, இன்று காலையும் தரமில்லாத ரவா கிச்சடியையே வழங்கினார்.

எனவே, 14-வது கோட்டத்தில் பணியாற்றும் ஒப்பந்தத் தொழிலாளர்கள் 16 பேரும், உணவை அவர்களிடமே திருப்பி வழங்கிவிட்டோம். தரமான உணவு தந்தால்தான் ஏற்றுக் கொள்வோம்.

இல்லையெனில், எங்களுக்கு இந்த உணவு வேண்டாம். இவ்வாறு அவர் கூறினார். இதுகுறித்து மாநகர நகர் நல அலுவலர் நமச்சிவாயத்திடம் கேட்டபோது, "14-வது கோட்டத்தில் தூய்மைப் பணியாளர்கள் காலை உணவைத் திருப்பி அனுப்பிய தகவல் இது வரை எனக்கு வரவில்லை, விசாரித்து உரிய நடவடிக்கை எடுக்கப்படும்" என்றார்.

## அரசியல் கார்னர்

# "திமுக அளித்த 505 வாக்குறுதிகளில் 400+ நிறைவேற்றம்" – கனிமொழி எம்.பி தகவல்

**ராமநாதபுரம், பிப்.12:** "கடந்த தேர்தலின்போது திமுக அளித்த 505 வாக்குறுதிகளில் 400-க்கும் மேற்பட்டவை நிறைவேற்றப்பட்டுள்ளது" என கனிமொழி எம்.பி தெரிவித்தார்.

ராமநாதபுரத்தில் திமுக தேர்தல் அறிக்கை தயாரிப்புக் குழு கூட்டம் இன்று திமுக துணை பொதுச் செயலர் கனிமொழி எம்பி தலைமையில் நடைபெற்றது. மாவட்டச் செயலாளர் காதர்பாட்சா முத்துராமலிங்கம் எம்எல்ஏ வரவேற்றார். இதில் அமைச்சர் பெரியகருப்பன், திமுக செய்தி தொடர்பாளர் டி.கே.எஸ்.இளங்கோவன், எம்எல்ஏக்கள் செ.முருகேசன், தமிழரசி, முன்னாள் அமைச்சர்கள் சத்தியமூர்த்தி, அன்வர்ராஜா, சுந்தர்ராஜன் உள்ளிட்ட கட்சியினர் கலந்து கொண்டனர்.

இந்தக் கூட்டத்தில் ராமநாதபுரம் மாவட்டத்தை சேர்ந்த விவசாய, வர்த்தக சங்கங்கள், மீனவ அமைப்புகள், நெசவாளர், தொழில் துறை அமைப்பினர், மிளகாய் வத்தல் வணிகள் சங்கங்கள், முஸ்லிம் ஜமாத்தார்கள், இந்து, கிறிஸ்தவ அமைப்பினர் உள்ளிட்ட பல்வேறு அமைப்பினர் தங்களது கோரிக்கைகளை தெரிவித்தனர்.

பின்னர் செய்தியாளர்களிடம் கனிமொழி எம்.பி கூறியது: "பல்வேறு அமைப்பினரும் தங்களது கருத்துகளை பகிர்ந்து கொண்டுள்ளனர். அனைத்தும் பரிசீலனை செய்யப்பட்டு, தகுதியானவை தேர்தல் அறிக்கையில் கொண்டுவரப்படும். கடந்த தேர்தலின்போது திமுக அளித்த 505 வாக்குறுதிகளில் 400-க்கும் மேற்பட்டவை திமுக அரசால் நிறைவேற்றப்பட்டுள்ளன. ஒரு சில வாக்குறுதிகள் மத்திய அரசின் ஒத்துழைப்பு இல்லாமல் நிறைவேற்ற முடியாமல் போனது. சில பரிசீலனையில் உள்ளன.

ராமநாதபுரம் மாவட்டத்தில் அடிப்படைத் தேவைகள், குறைபாடுகள், குறிப்பாக மீனவர் பிரச்சினையை குறித்த கோரிக்கைகளை வைத்துள்ளனர்.

அரசு ஊழியர்கள் அவர்களது கோரிக்கைகளை முன்வைத்து தேர்தலை மையமாகக் கொண்டு தொடர்ந்து போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர். காங்கிரஸ் தனிநபர்கள் எதையும் பேசலாம். திமுக மற்றும் காங்கிரஸ் தலைவர்களிடையே நல்ல உறவு உள்ளது. எதிர்க்கட்சித் தலைவர் பழனிச்சாமிதான் தினமும் பொய் பேசி வருகிறார்" எனத் தெரிவித்தார்.

# "நயினார் நாகேந்திரன் உடன் பனிப்போர் எதுவும் இல்லை" – அண்ணாமலை

**திருப்பூர், பிப்.12:** "நயினார் நாகேந்திரனுக்கும், எனக்கும் எந்த பனிப்போரும் இல்லை" என்று பாஜக முன்னாள் மாநிலத் தலைவர் அண்ணாமலை கூறினார்.

பல்லடத்தில் இன்று செய்தியாளர்களிடம் அவர் கூறியது: "உலக நாடுகளிடம் எங்கு போட்டி இருக்கிறதோ அங்கு எரிபொருள் வாங்கப்படும் என்று நாட்டின் வெளியுறவுத் துறை செயலர் சொல்லியிருக்கிறார். இதுதான் மத்திய அரசின் பதில். ரஷ்யாவில் இருந்து வாங்குகிறோமோ அல்லது வெனிசுலாவில் இருந்து வாங்குகிறோம் என்று சொல்லவில்லை.

தமிழகத்துக்கு மத்திய அரசு கொடுக்கப்பட்டுள்ளதை பட்ஜெட்டில் பலரும் பட்டியலிட்டுள்ளனர். அதிவேக ரயில்கள், மருந்து, ஜவுளிப் பூங்கா உள்ளிட்டவை தமிழ்நாட்டுக்கும் பொருந்தும். தமிழ்நாடு அரசு பட்ஜெட்போடும்போது, தனித்தனியாக மாவட்டங்களுக்கு போடுவதில்லை. ஒட்டுமொத்தமாகவே போடுகிறார்கள்.

இந்தியாவில் அதிகப்படியான மருத்துவக் கல்லூரி இருக்கும் மாநிலம் தமிழ்நாடுதான். மதுரையில் எய்ம்ஸ் மருத்துவமனை பணிகள் தொடர்ந்து வருகிறது. ஆனால் தமிழ்நாடு முதல்வர் மு.க.ஸ்டாலின், கட்டிட பணிகளை ஆய்வு செய்யலாமே? அவர் 5 ஆண்டுகளில் எத்தனை முறை மதுரைக்கு சென்றார்? எய்ம்ஸ் பக்கம் அவர் ஏன் போகவில்லை. எய்ம்ஸ் வரவில்லை என்று சொல்வது எளிது. ஆனால், மாநில அரசின் ஒத்துழைப்பின்றி கட்டுவது பெரும் சவால்தான்.

தேசிய ஜனநாயக கூட்டணி மேலும் வலுப்பெறும் வகையில் கூட்டணியில் சில கட்சிகள் சேரும். சிறுபான்மையினருக்கு கொடுக்கப்படும் ஊக்கத் தொகை பாஜக அரசு அதிகரித்துள்ளது. உதயநிதி ஸ்டாலின் பொத்தாம் பொதுவாக அபாண்டமான குற்றச்சாட்டை முன்வைக்கிறார். கடந்த 5 ஆண்டுகளில் சிறுபான்மையினருக்கும், பெரும்பான்மையினருக்கு திமுக அரசு என்ன செய்துள்ளது?

கேசவ விநாயகம் நல்ல மனிதர். ஆர்.எஸ்.எஸ் சங்கம் அவருக்கு வேறு பொறுப்பு வழங்கியுள்ளது. அவரது பணி சிறப்பாக முடிந்ததற்கு நேரில் சந்தித்து வாழ்த்து தெரிவித்துவிட்டு வந்தேன். நயினார் நாகேந்திரனுக்கும், எனக்கும் எந்த பனிப்போரும் இல்லை. கட்சி கொடுக்கும் வேலைகளை செய்து கொண்டிருக்கிறேன்" என்றார். தேசிய ஜனநாயக கூட்டணியில் விஜய் வருவாரா என்ற கேள்விக்கு, 'டீயும் காபியும் ஒன்றாக கலந்து குடிக்க முடியாது" என்றார்.

# த.வெ.க. நிர்வாகிகள் மீது தாக்குதல்: விஜய் கண்டனம்



**சென்னை, பிப்.12:** சென்னை பாரிமுனையில் சர்வே எடுக்கச் சென்ற த.வெ.க. கட்சியினர் மீது ரவுடிகள் தாக்குதல் நடத்தியதற்கு அக்கட்சியின் தலைவர் விஜய் கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பாக விஜய் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியதாவது:

தமிழக வெற்றிக் கழக தலைவர் விஜய் எக்ஸ் வலைதளத்தில் வெளியிட்டுள்ள செய்தியில் கூறியதாவது:

சென்னை பாரிமுனைப் பகுதியில் கள ஆய்வில் ஈடுபட்ட தமிழக வெற்றிக் கழகத்தைச் சேர்ந்த நிர்வாகிகள் மீது 100-க்கும் மேற்பட்ட ரவுடிகள் அராஜக தாக்குதல் நடத்தியிருப்பது கடும் கண்டனத்துக்கு உரியது.

இந்தத் தாக்குதலில், 4 மாதக் கர்ப்பிணி உள்பட நிர்வாகிகள் இருவர் படுகாயம் அடைந்துள்ளனர. அவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் அனுமதிக்கப்பட்டு, தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர். மேலும் 4 பேர் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

படுகாயம் அடைந்த கழகத் தோழர்கள் 6 பேரும் விரைவில் குணமடைய விழைகிறேன். தமிழக வெற்றிக் கழகத்திற்கு மக்களிடையே பெருகி வரும் செல்வாக்கைப் பொறுத்துக்கொள்ள முடியாதவர்கள், மக்களிடையே நன்மதிப்பைப் பெற்றுள்ள நம் கழகத் தோழர்கள் மீது இவ்வாறான வன்முறையைக் கட்டவிழ்த்து விட்டுள்ளனர்.

இது ஜனநாயகத்தின் குரல்வளையை நெரிக்கும் செயலாகும். தி.மு.க.வின் தோல்வி பயத்தையே இது காட்டுகிறது.

இந்த அராஜகத் தாக்குதலில் ஈடுபட்டவர்களுக்கு வரும் சட்டப்பேரவைத் தேர்தலில் தமிழக மக்கள் தக்க பாடம் புகட்டப் போவது நிச்சயம் என தெரிவித்துள்ளார்.

Published by R.S ROSHINE Printed by R.S. ROSHINE On behalf of R.S. ROSHINE Printed at J.M. Process, No 29, V.N. Doss Road, BorderThottam, Mount Road, Chennai – 600002.
and Published From NO. 42/62, Buchammal Street, 1st Floor, New Washermenpet, Tondiarpet, Chennai, Tamilnadu – 600081. Editor: R.S.ROSHINE, PH: 8122836299, e-mail: paperboynewspaper@gmail.com